# தமிழ்

## இகரம்

இரண்டாம் பருவம்




தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை – 600025.
www.tamilvu.org

# தமிழ்

## இகரம்

## இரண்டாம் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

**விலை:** ரூ. 170.00

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**நூல் அச்சாக்கம்**

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்**
**(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

**குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**அழையுங்கள் குழந்தை உதவி எண்** 1098
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?**
**அழையுங்கள்** 14417
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

**கல்வித் தகவல் மையம்**

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 17 | **தமிழர் விருந்தோம்பல்** | | 1 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | நாட்டு வணக்கம் | சின்ன மருது | |
| | தெரிந்துகொள்வோம் | செந்தமிழ்ச்செல்வம் | |
| | வேற்றுமை (1-4) | விவேக சிந்தாமணி | |
| 18 | **உலகப் பழமொழிகள்** | | 13 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | கவிதை | தேன்சிட்டின் அறிவுக்கூர்மை | |
| | தெரிந்துகொள்வோம் | செந்தமிழ்ச்செல்வம் | |
| | மரபு (பெயர், ஒலி) | பழமொழி நானூறு | |
| 19 | **சக்கரம்** | | 25 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | நிலா | ஜி.டி. நாயுடு | |
| | தெரிந்துகொள்வோம் | செந்தமிழ்ச்செல்வம் | |
| | வேற்றுமை (5 - 8) | திருக்குறள் | |
| 20 | **கலீலியோவும் ஜேம்ஸ்வாட்டும்** | | 35 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | ஓதுவது ஒழியேல் | கதை - கூகுள் வரைபடம் | |
| | தெரிந்துகொள்வோம் | செந்தமிழ்ச்செல்வம் | |
| | உவமைத்தொடர்கள் | மூதுரை | |
| 21 | **கணினி** | | 47 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | செந்தமிழா! ஒரு வார்த்தை | விண்வெளிக் கழிவுகள் | |
| | தெரிந்துகொள்வோம் | செந்தமிழ்ச்செல்வம் | |
| | ஒரு சொல் பல பொருள் | திருக்குறள் | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 22 | **தன்னிகரில்லாத் தாரா** | | 57 |
| | பாடி மகிழ்வோம்: நிலா! நிலா! | கேட்டல் கருத்தறிதல்: கதை – அன்பு | |
| | தெரிந்துகொள்வோம்: மரபுத்தொடர்கள் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 23 | **அன்பே அறம்** | | 66 |
| | பாடி மகிழ்வோம்: அன்பு | கேட்டல் கருத்தறிதல்: கதை – நரியின் தந்திரம் | |
| | தெரிந்துகொள்வோம்: பல சொல் ஒரு பொருள் | செந்தமிழ்ச்செல்வம்: திருவள்ளுவ மாலை | |
| 24 | **கைலாஷ் சத்தியார்த்தி** | | 76 |
| | பாடி மகிழ்வோம்: பாப்பா படி | கேட்டல் கருத்தறிதல்: கதை – உதவும் மனம் வேண்டும் | |
| | தெரிந்துகொள்வோம்: இணைமொழிகள் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | | 86 |
| 25 | **உடல்நலம் காக்கும் உணவுகள்** | | 91 |
| | பாடி மகிழ்வோம்: உழவுப்பாடல் – களை பறித்தல் | கேட்டல் கருத்தறிதல்: திட மற்றும் திரவ உணவுகள் | |
| | தெரிந்துகொள்வோம்: இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 26 | **நல்ல பழக்கவழக்கங்கள்** | | 104 |
| | பாடி மகிழ்வோம்: பாடு பாப்பா | கேட்டல் கருத்தறிதல்: பிளாஸ்டிக் கழிவுகள் | |
| | தெரிந்துகொள்வோம்: எண்ணுப்பெயர்கள் | செந்தமிழ்ச்செல்வம்: வனப்பு - சிறுபஞ்சமூலம் | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 27 | **கல்விக்கண் திறந்த காமராசர்** | | 118 |
| | **பாடி மகிழ்வோம்**<br>எனது ஆசை | **கேட்டல் கருத்தறிதல்**<br>கதை – உழைப்பே உயர்வு | |
| | **தெரிந்துகொள்வோம்**<br>தொடரமைப்பு | **செந்தமிழ்ச்செல்வம்**<br>திருக்குறள் | |
| 28 | **சார்லி சாப்ளின்** | | 129 |
| | **பாடி மகிழ்வோம்**<br>பாட்டுப் பாடுவேன் | **கேட்டல் கருத்தறிதல்**<br>கதை – அன்பிற்கு விலை ஏது! | |
| | **தெரிந்துகொள்வோம்**<br>நிறுத்தக்குறிகள் | **செந்தமிழ்ச்செல்வம்**<br>திருக்குறள் | |
| 29 | **மனிதநேயமிக்க சுகந்தி** | | 140 |
| | **பாடி மகிழ்வோம்**<br>நல்ல பண்பை வளர்த்தல் | **கேட்டல் கருத்தறிதல்**<br>போரில் பூத்த மனிதநேயம் | |
| | **தெரிந்துகொள்வோம்**<br>செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடர்கள் | **செந்தமிழ்ச்செல்வம்**<br>உணவு உண்ணும் முறை ஆசாரக்கோவை | |
| 30 | **மனிதம் போற்றும் மரியா** | | 153 |
| | **பாடி மகிழ்வோம்**<br>இன்பம் | **கேட்டல் கருத்தறிதல்**<br>மனித நேயம் | |
| | **தெரிந்துகொள்வோம்**<br>நான்கு சொல் கொண்ட தொடர்கள் | **செந்தமிழ்ச்செல்வம்**<br>திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | | 164 |

17.1 பேசுவோம்

பாடம் 17




## கலந்துரையாடுவோம்

உங்கள் பிறந்தநாள் விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்களை எவ்வாறு வரவேற்றீர்கள்? குழுவாகக் கலந்துரையாடுக.

## 17.2 படிப்போம்

### தமிழர் விருந்தோம்பல்



வீட்டிற்கு வருகைதரும் உறவினரை வரவேற்றல், இனிமையாகப் பேசுதல், உணவு அளித்து மகிழ்தல் ஆகிய செயல்களை விருந்தோம்பல் என்கிறோம். விருந்தோம்பும் பண்பு, நாட்டுக்கு நாடு வேறுபடும். தமிழர்களின் விருந்தோம்பும் பண்பு சிறப்பானது. முகத்தில் சிறிது கடுமையைக் கண்டாலே, விருந்தினர் மனம் வருந்துவர் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் தமிழர்கள். ஆகையால், இன்முகத்துடன் விருந்தினர்களை வரவேற்பர். அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் தருவர். பின்னர், வாழை இலையில் அறுசுவை உணவு வைத்து உண்ணுமாறு வேண்டுவர். வாழை இலையின் இடப்பக்கத்திற்கு மேலே உப்பு, இனிப்பு, கூட்டு, பொரியல், வறுவல், அப்பளம் வைப்பர். கீழ்ப்பகுதியில் சோறு, பருப்பு, நெய், குழம்பு, ரசம், பாயாசம், மோர் ஆகியவற்றைத் தேவையறிந்து பரிமாறுவர். உணவு உண்ட பின்னர், கை கழுவ நீர் தருவர். இறுதியாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றும் கலந்து தருவர். உண்ட உணவு செரிப்பதற்கு இது பயன்படும். உறவினர்களுடன் இனிமையாகப் பேசி மகிழ்வர். அவர்கள் புறப்படும்போது வாசல்வரை சென்று வழியனுப்புவர்.

### பொருள் அறிவோம்

1. விருந்தினர் – வீட்டிற்கு வருகைதருபவர்
2. ஓம்பல் – வரவேற்றுப் பணிவிடை செய்தல்
3. இன்முகம் – இனிய முகம்
4. அறுசுவை – ஆறு சுவை – இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு

### வினாக்கள்

1. விருந்தோம்பல் என்றால் என்ன?
2. விருந்தினர் எப்பொழுது மனம் வருந்துவர்?
3. வாழை இலையில் உணவு பரிமாறும் முறையைக் கூறுக.

## 17.3 பாடிமகிழ்வோம்

### நாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே -அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே -அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே -இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ

– பாரதியார்



## 17.4 தெரிந்துகொள்வோம்

### வேற்றுமை (1–4)

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை. இது எட்டு வகைப்படும். அவற்றுள் முதல் வேற்றுமை முதல் நான்காம் வேற்றுமை வரை இப்பகுதியில் படிப்போம்

**முதல் வேற்றுமை (எழுவாய் )**

| வேற்றுமை உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|
| எழுவாய் |  மகிழன் வரைந்தான். |
| |  பறவைகள் பறக்கின்றன. |

இரண்டாம் வேற்றுமை (செயப்படு பொருள்)

| வேற்றுமை உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|
| ஐ |  நீங்கள் திருக்குறளைப் படித்தீர்கள். |
| |  ஆனந்தி பூச்செடிகளை வளர்த்தாள். |

மூன்றாம் வேற்றுமை (கருவி)

| வேற்றுமை உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|
| ஆல் |  நான் ஊசியால் துணி தைத்தேன். |

| சொல் உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|
| ஒடு |  வளவன் தன் நண்பனொடு வந்தான். |

| சொல் உருபு | எடுத்துக்காட்டு |
| --- | --- |
| ஓடு |  நீ நண்பனோடு விளையாடினாய். |
| உடன் |  தந்தையுடன் மகன் சென்றான். |
| கொண்டு |  நான் எழுதுகோல் கொண்டு எழுதினேன். |

நான்காம் வேற்றுமை (கொடை)

| வேற்றுமை உருபு | எடுத்துக்காட்டு |
| --- | --- |
| கு |  அண்ணன் வீட்டுக்கு வந்தேன். |

| சொல் உருபு | எடுத்துக்காட்டு |
| --- | --- |
| பொருட்டு |   மழையின் பொருட்டு விடுமுறை. |
| நிமித்தம் |  வேலை நிமித்தம் ஊருக்குச் சென்றான். |
| ஆக |  நூலகத்திற்காகப் புத்தகம் வாங்கினாள். |

## பயிற்சிகள்

1. பின்வருவனவற்றுள் எந்தெந்த வேற்றுமை உருபுகள் இடம்பெற்றுள்ளன என்பதைக் குறிப்பிடுக?

   அ) வள்ளி பாடினாள்.

   ஆ) அனிதா படத்தை வரைந்தாள்.

   இ) மருத்துவர் நோய்க்கு மருந்து தந்தார்.

   ஈ) குயில் கூவியது.

   உ) கவின் காலால் பந்தை உதைத்தான்.

2. அடைப்புக்குறிக்குள் உள்ள வேற்றுமை உருபைச் சேர்த்துத் தொடரை முழுமையாக்குக .

   அ) நான் பள்ளி (கு) சென்றேன். ______________________

   ஆ) குயவன் பானை (ஐ) வனைந்தான். ______________________

   இ) அம்மா (உடன்) தங்கை வந்தாள். ______________________

   ஈ) வண்டு தேன் (ஐ) குடித்தது. ______________________

   உ) மணி தூரிகை (ஆல்) வண்ணம் தீட்டினான். ______________________

## 17.5 மொழியோடு விளையாடுவோம்

**முதல் படத்திற்குரிய பெயரையும் இரண்டாம் படத்திற்குரிய பெயரையும் இணைத்துப் புதிய சொல் உருவாக்குக.**




புத்தகப்பை




____________________




____________________




____________________




____________________

## தகவல் துளி

கோவையில் 'ஒரு ரூபாய்க்கு இட்டலி' விற்பனை செய்து புகழ்பெற்றவர் கமலாத்தாள். இவரது சேவையைப் பாராட்டி மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மஹிந்திரா வாழ்த்து தெரிவித்ததோடு மஹிந்திரா குழுமத்தின் சார்பில் 1.75 சென்ட் நிலம் பரிசாக வழங்கினார். அதன்பின், வீடு மற்றும் இட்டலிக் கடை நடத்துவதற்கான கட்டுமானப் பணிகளையும் செய்துகொடுத்தார். இந்நிலையில் அன்னையர் தினமான மே 8, 2022 ஆம் ஆண்டில் கமலாத்தாள் பாட்டியிடம் வீட்டுக்கான சாவி வழங்கப்பட்டது.



கமலாத்தாள்

## கருத்து விளக்கப்படம்



### வினாக்கள்

1. திண்ணை வைத்த வீடுகளின் பயன்கள் குறித்துக் கூறுக.
2. ஒரு வீட்டின் திண்ணையில் ஏன் பானை வைத்திருக்கிறார்கள்?
3. தற்கால வீடுகள், திண்ணை வைத்த வீடுகள் இரண்டிற்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமை குறித்துக் கலந்துரையாடுக.

## 17.6 கேட்டல் கருத்தறிதல்

### சின்ன மருது



சிவகங்கையின் மன்னராக விளங்கியவர் சின்ன மருது. அவரது கொடைச்சிறப்பை விளக்கும் வகையில் வழிவழியாகக் கூறப்படும் ஒரு நிகழ்வுதான் இது. அவர், ஒருமுறை நெடுந்தொலைவு பயணம் செய்ததால் களைப்பாக இருந்தார். அப்போது அவருக்குப் பசித்தது. தூரத்தில் ஓர் ஓலைக்குடிசையைப் பார்த்தார். அங்குச் சென்று அந்த வீட்டிலிருந்த பாட்டியிடம், "எனக்குப் பசியாக உள்ளது, சாப்பிட ஏதாவது தாருங்கள்" என்று கேட்டார்.

அவரை வரவேற்ற பாட்டி, "வீட்டில் பழைய சோறுதான் உள்ளது" என்றார். "எதுவாக இருந்தாலும் பரவாயில்லை தாருங்கள்" என்றார். பாட்டி கொடுத்த பழைய சோற்றைச் சின்ன மருது விரும்பி உண்டார். தாம் யாரென்று தெரியாமலே அன்பாக விருந்தோம்பல் செய்த அந்தப் பாட்டிக்குப் பரிசளிக்க விரும்பினார். என்ன பரிசு தெரியுமா?

தன்னை யாரென்று அறியாது அமுதென அள்ளிக்கொடுத்த பழைய சோற்றிற்காக அந்த ஊரையே பாட்டிக்குப் பரிசாக அளித்தார் சின்ன மருது. அந்த ஊரின் பெயர்தான் "பழம்சோறு குருநாதனேந்தல்"

### வினாக்கள்

1. சின்ன மருது எந்தப் பகுதியின் மன்னராக விளங்கினார்?
2. சின்ன மருது எப்படிப்பட்டவர்?
3. மன்னரின் பசி தீர, பாட்டி அளித்த உணவு என்ன?
4. மன்னர், பாட்டிக்கு அளித்த பரிசு என்ன?
5. இந்நிகழ்வின் மூலம் வெளிப்படும் தமிழர் பண்பு என்ன?

## 17.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 17.8 செந்தமிழ்ச்செல்வம்

### விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித்(து) உண்மை பேசி
உப்பிலாக் கூழ்இட் டாலும் உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே.

(பாடல் - 4)

(முப்பழம் - மா, பலா, வாழை; அன்னம் - சோறு; கடும்பசி - மிகுந்த பசி)

**பொருள்:**

வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, அவரிடத்தே உண்மையையே பேசி உப்பில்லாத கஞ்சி அளித்தாலும் அஃது அமிழ்தம் உண்பது போலாகும். அவ்வாறின்றி, மனத்திலுள்ள வெறுப்பை முகத்தில் காட்டி, மூவகைப் பழத்தொடு பால்சோறு அளித்தாலும் அவை பசியை நீக்காமல், ஏற்கெனவே மிகுந்திருக்கும் பசியை மேலும் அதிகரித்துவிடும்.

## 17.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | முகம் | - | Face |
| 2. | கடுமை | - | Severity |
| 3. | இன்முகம் | - | Cheerful countenance |
| 4. | விருந்தினர் | - | Guest |
| 5. | வாசல் | - | Door |
| 6. | சோறு | - | Rice |
| 7. | நெய் | - | Ghee |
| 8. | பருப்பு | - | Lentils |
| 9. | மோர் | - | Buttermilk |
| 10. | வெற்றிலை | - | Betel leaves |
| 11. | பாக்கு | - | Areca nut |
| 12. | சுண்ணாம்பு | - | Lime |
| 13. | வருத்தம் | - | Regret |
| 14. | வரவேற்றல் | - | Welcoming |

## 17.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமாக ஒரு தொடர் உருவாக்குக.



______________________________



______________________________









## 17.11 செயல்திட்டம்

தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டை விளக்கும் படத்தொகுப்பு ஒன்றைத் தயார் செய்க.

18.1 பேசுவோம்

பாடம்

# 18



## கலந்துரையாடுவோம்

வீட்டில் உம் தாத்தா பாட்டியிடம் கேட்டறிந்த கதைகளை வகுப்பில் கூறுக.

## 18.2 படிப்போம்

### உலகப் பழமொழிகள்

ஒரு நாட்டின் தொன்மையை அறிவதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று பழமொழி. இதனை முதுமொழி என்றும் கூறுவர். மக்களின் அனுபவங்களே பழமொழிகளாக உருவாகின்றன. முதியவர்கள் கூறும் கதைகளில் பழமொழிகள் கட்டாயம் இடம்பெறுகின்றன. மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பழமொழிகள் தெரிவிக்கின்றன. உங்களுக்காக, இதோ சில பழமொழிகள்:

அமெரிக்கப் பழமொழி




அரேபியப் பழமொழி




சீனப் பழமொழி




தமிழ்நாட்டுப் பழமொழி




இங்கிலாந்துப் பழமொழி




ஆப்பிரிக்கப் பழமொழி



## பொருள் அறிவோம்

1. தொன்மை – பழைமை
2. சான்று – சாட்சி
3. அனுபவம் – பட்டறிவு
4. முதியவர்கள் – வயதில் மூத்தவர்கள்

## விடை காண்போம்

1. பழமொழிக்கு வழங்கும் வேறு பெயர் என்ன?
2. பழமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
3. பழமொழிகளின் வாயிலாக எவற்றை அறியலாம்?
4. அரேபியப் பழமொழி கூறும் அன்பின் சிறப்பு யாது?
5. சிறுதுளி பெருவெள்ளம் என்னும் பழமொழியின் பொருள் யாது?



## 18.3 பாடிமகிழ்வோம்



### கவிதை

பறக்கும் குருவி யோடென் - உள்ளம்
பறந்து பறந்து திரியும்;
கறக்கும் பசுவைச் சுற்றி - அதன்
கன்று போலத் துள்ளும்.

ஈயும் எனக்குத் தோழன் - ஊரும்
எறும்பும் எனக்கு நேசன்;
நாயும் எனக்குத் தோழன் - குள்ள
நரியும் எனக்கு நண்பன்.

– கவிமணி தேசிக விநாயகனார்

## 18.4 தெரிந்துகொள்வோம்

### மரபு (பெயர், ஒலி)

### பெயர் மரபு

மகிழனும் ஆதிமொழியும் தாத்தாவுடன் உயிரியல் பூங்காவிற்குச் சென்றனர்.



"ஐ! யானை! யானைக்குட்டி" என இருவரும் கத்தினர். தாத்தா "யானைக்குட்டி என்று கூறக்கூடாது; யானைக்கன்று என்று கூற வேண்டும்" என்றார்.



அதோ, சிங்கம்! அதன் குட்டிக்கு என்ன பெயர் தாத்தா? என்று கேட்டான் மகிழன். "சிங்கக்குருளை எனக் கூற வேண்டும்" என்றார் தாத்தா.



"அப்படின்னா புலிக்குட்டிக்கு?" என்று ஆதிமொழி கேட்க, தாத்தா உடனே, "புலிப்பறழ்" என்றார்.

தாத்தா, நாம் ஏன் இவ்வாறு அழைக்கிறோம்? என்று ஆதிமொழி கேட்டாள். அதற்குத் தாத்தா, இதுதான் மரபு என்றார். மரபா? அப்படியென்றால் என்ன? என்றாள் அவள். நம் முன்னோர்கள் ஒரு சொல்லை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அச்சொல்லால் அவ்வாறே வழங்க வேண்டும். அதுதான் மரபு என்றார் தாத்தா.

| ஒலிமரபு | |
|---|---|
|  | ஆந்தை அலறும் |
|  | கோழி கொக்கரிக்கும் |
|  | மயில் அகவும் |
|  | காகம் கரையும் |
|  | குயில் கூவும் |

## பயிற்சிகள்

### அ) சரியான சொல்லைத் தேர்வு செய்க.

1. புலியின் இளமைப் பெயர் ______

(அ) புலிக்குட்டி (ஆ) புலிக்கன்று (இ) புலிப்பறழ் (ஈ) புலிப்பிள்ளை

2. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை, சொல்லியவாறே நாமும் சொல்வது ______

(அ) சிறப்பு (ஆ) புதுமை (இ) மரபு (ஈ) பழைமை

3. யானையின் இளமைப் பெயர் ______

(அ) கன்று (ஆ) பறழ் (இ) பிள்ளை (ஈ) குருளை

4. மகிழனும் ஆதிமொழியும் தாத்தாவுடன் ______ சென்றனர்.

(அ) சுற்றுலா (ஆ) கடற்கரை (இ) உயிரியல் பூங்கா (ஈ) திரையரங்கம்

### ஆ) பொருத்துக

1. ஆந்தை – கொக்கரிக்கும்
2. காகம் – அகவும்
3. மயில் – அலறும்
4. குயில் – கரையும்
5. கோழி - கூவும்

### இ) கீழ்க்காணும் பழமொழிகளில் விடுபட்ட சொற்களைச் சரியாகப் பொருத்துக

**(ஐம்பதில், அக்கரை, அளந்து, நஞ்சு, அழகு)**

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் ______
2. அகத்தின் ______ முகத்தில் தெரியும்
3. இக்கரைக்கு ______ பச்சை
4. ஆற்றில் போட்டாலும் ______ போடு
5. ஐந்தில் வளையாதது ______ வளையுமா?

## 18.5 மொழியோடு விளையாடுவோம்

**படங்களைப் பார்த்து வினாக்களுக்குரிய விடையைக் கண்டறிக.**











வினாக்கள்

1. ஐந்து அடுக்கு, நான்கு இடுக்கு அது என்ன?
2. எட்டுப் பேர், நாங்க எங்க தலைவரைக் காப்பாத்த முன்னாலே போவோம், பின்னாலே வரமாட்டோம், நாங்கள் யார்?
3. ஆடி ஆடி நடந்தான், அமைதியாக அதிர வைத்தான் அவன் யார்?
4. யாரும் ஏறமுடியாத மரம், கிளைகள் இல்லாத மரம் அது என்ன?
5. எத்தனை முறை சுற்றினாலும் தலை சுற்றாது அது என்ன?

| | | | | |
|---|---|---|---|---|
| கை | யானை | சதுரங்கச்சிப்பாய்கள் | மின்விசிறி | வாழை |

## 18.6 கேட்டல் கருத்தறிதல்

### தேன்சிட்டின் அறிவுக்கூர்மை



அடர்ந்த காடு. அங்கு விலங்குகளும் பறவைகளும் வசித்தன. புறா ஒன்று, ஒரு நாள் மற்றப் பறவைகளிடம், 'விலங்குகளுக்குத் தலைவன் இருப்பதுபோல நமக்கும் ஏன் தலைவன் இருக்கக் கூடாது?' என்று கேட்டது. 'நாம் தலைவனை எப்படித் தேர்ந்தெடுப்பது?' என்றது குயில். அதற்குப் புறா, 'மிக உயரமாக எந்தப் பறவை பறக்கிறதோ, அதுவே நமக்குத் தலைவன்' என்றது. இதனைக் கேட்ட கழுகு, 'நான் மிக உயரத்தில் பறப்பேன். நான்தான் தலைவனாக முடியும்' என்றது. 'அது எப்படி? நாம் போட்டியின் மூலமே தலைவனைத் தேர்ந்தெடுக்கலாம்' என்று தேன்சிட்டு கூறியது. போட்டி தொடங்கியது. வழக்கம்போல் கழுகு எல்லாப் பறவைகளையும்விட உயரமாகப் பறந்தது. 'நான் தலைவனாகிவிட்டேன்' என்று கூறிக்கொண்டே அது கீழே இறங்கியது. அப்போது, அதனுடைய இறக்கையில் அமர்ந்திருந்த தேன்சிட்டு, சட்டெனச் சிறகை விரித்துக் கழுகைவிட உயரமாகப் பறக்கத் தொடங்கியது. அதனைப் பார்த்ததும் கழுகு பதறியது. அதனுடைய ஆணவம் அழிந்தது. எல்லாப் பறவைகளும் தேன்சிட்டைத் தலைவனாக ஏற்றுக் கொண்டன. 'தலைவனாக ஆவதற்கு வலிமை மட்டும் போதாது, அறிவுக்கூர்மையும் வேண்டும்' என்பதைப் பறவைகள் உணர்ந்துகொண்டன.

### வினாக்கள்

1. பறவைகளுக்குத் தலைவன் வேண்டும் என்று கூறியது எது?
2. குயில் கேட்ட வினாவுக்குப் புறா கூறிய விடை என்ன?
3. கழுகு மற்றப் பறவைகளிடம் என்ன கூறியது?
4. தேன்சிட்டு எவ்வாறு வெற்றி பெற்றது?
5. கதையின் மூலம் நீங்கள் உணர்ந்ததை எழுதுக.

## தகவல் துளி

- தமிழில் வழங்கும் நீதி நூல்களுள் ஒன்று 'பழமொழி நானூறு'. இந்நூலில் நானூறு பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றிருப்பது இந்நூலின் சிறப்பாகும்.
- 1843 ஆம் ஆண்டு தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்பு நூல் ஒன்றைத், 'திருட்டாந்த சங்கிரகம்' என்னும் பெயரில் பெர்சிவல் என்பார் வெளியிட்டார். இந்நூலில், 1,873 பழமொழிகள் அகர வரிசையில் உள்ளன.
- 1897 இல் 3,644 தமிழ்ப் பழமொழிகள் கொண்ட தொகுப்பு நூலை ஹெர்மன் ஜென்சன் வெளியிட்டார். ஆங்கிலத் தலைப்புகளுடன் தொகுக்கப்பெற்ற இப்பழமொழிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளன.

## 18.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 18.8 செந்தமிழ்ச்செல்வம்

### பழமொழி நானூறு

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் – நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்

(பாடல்-184)

- முன்றுறை அரையனார்

(பேதை - அறிவில்லாதவர்; நுணல் - தவளை)

**பொருள்:**

அழகிய பெண்ணே! நான் கூறுவதைக் கேள். மணலில் மறைந்து வாழும் தவளை, தான் எழுப்பும் ஒலியால் தன் மறைவிடத்தை எதிரிக்குக்காட்டி, அழிந்துவிடும். அதுபோல, அறிவில்லாதவர்கள் தம் வாயாலேயே தீங்கு தரும் சொற்களைப் பேசித் தமக்குத் தாமே துன்பத்தைத் தேடிக் கொள்வர்.

## 18.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பழமொழி | - | Proverb |
| 2. | உணவு | - | Food |
| 3. | அன்பு | - | Affection |
| 4. | இயற்கை | - | Nature |
| 5. | ஆற்றல் | - | Energy |
| 6. | வாழ்க்கை | - | Life |
| 7. | அனுபவம் | - | Experience |
| 8. | பண்பாடு | - | Culture |
| 9. | விருந்தோம்பல் | - | Hospitality |
| 10. | முதியவர்கள் | - | Elderly people |
| 11. | உயிரியல் பூங்கா | - | Zoo |

## 18.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### நாட்குறிப்பு எழுதுவோம்

தமிழ்ப் பள்ளியின் இன்றைய நிகழ்வுகளை உமது நாட்குறிப்பேட்டில் எழுதுக.

**காலை நிகழ்வு**

---

**நண்பகல் நிகழ்வு**

---

**மாலை நிகழ்வு**

---

## 18.11 செயல்திட்டம்

பழமொழி ஒன்றை வைத்துக் கதையை உருவாக்கிக் கூறுக.



## பாடம் 19

### 19.1 பேசுவோம்

### கலந்துரையாடுவோம்

போக்குவரத்தில் சக்கரத்தின் பயன்பாடுகள் பற்றி ஆசிரியரோடு கலந்துரையாடுக.

## 19.2 படிப்போம்

### சக்கரம்



மக்களின் வாழ்வில் புரட்சியை எற்படுத்திய ஒரு கருவி, சக்கரம். ஒரு பொருளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல, சக்கரம் உதவுகிறது. மண்பாண்டப் பொருள்கள் சக்கரங்களைக் கொண்டே உருவாயின. தற்போது பெரிய தொழிற்சாலைகளிலும் நவீன இயந்திரங்களிலும் வேலை நடைபெறச், சக்கரங்கள் உதவுகின்றன. போக்குவரத்து வளர்ச்சிக்குச் சக்கரங்கள் மிகவும் தேவை. தரையில் செல்லும் மிதிவண்டிமுதல் வானில் பறக்கும் விமானம்வரை சக்கரங்கள் பயன்படுகின்றன. மரம், உலோகம், ரப்பர் ஆகியவற்றால் சக்கரங்கள் உருவாக்கப்படுகின்றன. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்களிலும் சக்கரங்கள் உள்ளன. அன்றாட வாழ்வில் நம்முடைய செயல்களைச் சக்கரங்கள் மிகவும் எளிதாக்குகின்றன.

## பொருள் அறிவோம்

1. புரட்சி – எதிர்பாராத மாற்றம்
2. மண்பாண்டம் – மண்ணைக் குழைத்துச் செய்யப்படும் பொருள்
3. நவீன இயந்திரம் – புதுமையான கருவி
4. அன்றாடம் – நாள்தோறும்

## விடை காண்போம்

1. மக்களின் வாழ்வில் புரட்சியை ஏற்படுத்திய கருவி எது?
2. சக்கரம் எதற்கு உதவுகிறது?
3. எந்தெந்தப் பொருள்களைக் கொண்டு சக்கரங்கள் உருவாகின்றன?
4. சக்கரங்கள் கொண்ட போக்குவரத்து வண்டிகள் நான்கைக் கூறுக.
5. மிதிவண்டியில் எத்தனை சக்கரங்கள் உள்ளன?

## 19.3 பாடிமகிழ்வோம்

### நிலா

வட்ட வட்டத் தட்டு நிலா
வானத்திலே மிதக்கும் நிலா
எட்டிஎட்டி மேகத் திரையில்
என்னைப் பார்க்கும் தங்க நிலா
பொட்டுப் போலத் தோன்றும் நிலா
பொங்கும் பாலைப் போன்ற நிலா
முல்லைப் பூவைப் போன்ற வெள்ளை
முத்துச்சுடரை வீசும் நிலா
எல்லை யில்லா வீதி வழியே
இன்ப மாகப் போகும் நிலா.

- பெ.தூரன்

## 19.4 தெரிந்துகொள்வோம்

### வேற்றுமை (5–8)

**ஐந்தாம் வேற்றுமை (நீங்கல்)**

| வேற்றுமை உருபு | சொல் உருபு | எடுத்துக்காட்டு | |
|---|---|---|---|
| இன் | - |  | மலையின் வீழ் அருவி. |
| இன் | நின்று |  | மரத்தினின்று விழுந்த மலர்கள். |
| இல் | - |  | அழகில் சிறந்தது மயில் |
| இல் | இருந்து |  | வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்றான். |

### ஆறாம் வேற்றுமை (உடைமை)

| | | | |
|---|---|---|---|
| அது | - |  | எனது புத்தகப்பை அழகானது. |
| - | உடைய |  | முகிலனுடைய அப்பா சிறந்த பேச்சாளர். |

### ஏழாம் வேற்றுமை (இடம்)

| | | | |
|---|---|---|---|
| கண் | - |  | மரத்தின்கண் பாம்பைக் கண்டேன். |
| - | முன் |  | வீட்டின் முன் நாய் குரைத்தது. |
| - | மேல் |  | கூரையின் மேல் சேவல் கூவியது. |

எட்டாம் வேற்றுமை (விளி)

| | | |
|---|---|---|
| - | - |  நண்பா, படம் பார்க்கலாமா? |
| - | - |  அரசே, பொருள் தந்து உதவுங்கள். |

## பயிற்சிகள்

1. பின்வரும் தொடர்களில் எந்தெந்த வேற்றுமைகளுக்குரிய உருபுகள் உள்ளன?

அ) என் நண்பனிடமிருந்து கடிதம் வந்தது.

ஆ) மரக்கிளையில் குருவிக்கூடு இருந்தது.

இ) தமிழில் நல்ல இலக்கிய நூல்கள் உள்ளன.

ஈ) அவளது ஆடை அழகாய் இருந்தது.

உ) அண்ணா! அந்தப் புத்தகத்தைக் கொடுங்கள்.

2. பொருத்தமான வேற்றுமை உருபு / சொல்லுருபு சேர்த்து எழுதுக.

(இல், இன், உடைய, அது, மேல், கீழ், உள், கண், இருந்து)

அ) மரம்/இலைகள்/உதிர்ந்தன.

ஆ) அனுஷ்கா /ஊர்/ வந்தாள்.

இ) வானம்/விமானம்/கண்டேன்.

ஈ) உன்/எழுதுகோல்/கொடு.

உ) என்/நாடு/வளமிக்கது.

## சுவைச்செய்தி

உயிரினங்கள் வாழமுடியாத நீர்நிலையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இஸ்ரேலில் உள்ள சாக்கடல் (Dead Sea) என்று அழைக்கப்படும் கடலில்தான் இந்த நிலை உள்ளது. ஏன் தெரியுமா? இக்கடலில் மிக அதிக அளவு உப்பு உள்ளது. இயல்பாகக் கடல்நீரில் இருக்கும் உப்புத் தன்மையைவிட 8.6 மடங்கு உப்பு உள்ளது. இக்கடலின் நீளம் 67 கி.மீ. அகலம் 19 கீ.மீ. இதன் ஆழம் 377மீ. இக்கடலில் நாம் மிதக்கலாம். அந்த அளவிற்கு உப்பு மிகுந்து நீரின் அடர்த்தி அதிகமாக உள்ளது.




## 19.5 மொழியோடு விளையாடுவோம்

**பகடைக்காயை உருட்டுக. அதில் வரும் எண் குறிக்கும் சொல்லைக் கொண்டு வாக்கியத்தை உருவாக்குக.**



| | | |
|---|---|---|
| 1. விடுமுறை | 2. விருந்து | 3. அன்பு |
| 4. முயற்சி | 5. நன்றி | 6. பழமொழி |

எடுத்துக்காட்டு

1. எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு வருகை தந்ததற்கு நன்றி
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

## 19.6 கேட்டல் கருத்தறிதல்

### ஜி.டி. நாயுடு



இந்திய விஞ்ஞானிகளுள் குறிப்பிடத்தக்கவர், கோவையைச் சேர்ந்த கோபாலசாமி துரைசாமி நாயுடு (ஜி.டி. நாயுடு, 1893 - 1974). இவர், மின்னியல், மின்னணுவியல், தானியங்கி, விவசாயம் எனப் பல்துறையில் புகழ் பெற்றவர். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்டவர். ஜி.டி. நாயுடுவை இந்தியாவின் தாமஸ் ஆல்வா எடிசன் என அழைப்பர். மின்மோட்டார், சுவர்க்கடிகாரம், சிமெண்ட் கலவை இயந்திரம், சவரம் செய்யும் கருவி, உருளைக்கிழங்கு தோல் சீவும் கருவி, கம்பியில்லா ஒலிபரப்புக் கருவி, தானியங்கிச் சீட்டு அளிக்கும் கருவி, தமிழில் அழைப்பொலி கருவி முதலியவற்றைக் கண்டறிந்தார். இவரது பருத்திச் செடிக்கு 'நாயுடு காட்டன்' எனப் பெயரிட்டு ஜெர்மன் நாடு பெருமைப்படுத்தியது. கண்டுபிடிப்பாளராக மட்டும் இல்லாமல் யுனைடெட் மோட்டார் சர்வீஸ், பருத்தி ஆலை எனப் பல தொழில்களிலும் ஈடுபட்டிருந்தார்.

**வினாக்கள்**

1. ஜி.டி. நாயுடு எத்துறைகளில் புகழ் பெற்றவர்?
2. ஜி.டி.நாயுடுவின் பருத்திச் செடிக்கு ஜெர்மன் நாடு இட்ட பெயர் என்ன?
3. ஜி.டி. நாயுடு கண்டுபிடித்த கருவிகள் சிலவற்றைக் கூறுக.
4. இந்தியாவின் தாமஸ் ஆல்வா எடிசன் என யாரைப் புகழ்ந்தனர்?

## 19.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 19.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்

(குறள் 475)

-திருவள்ளுவர்

(பீலி - மயில் இறகு; சாகாடு - வண்டி)

**பொருள்:**

மயில் இறகு மிகவும் மெல்லியது. அதனையும் அளவுக்கு அதிகமாக ஏற்றினால், எடை தாங்காமல் வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

## 19.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கருவி | - | Tool |
| 2. | மரம் | - | Tree |
| 3. | உலோகம் | - | Metal |
| 4. | சக்கரம் | - | Wheel |
| 5. | மண்பாண்டம் | - | Pottery |
| 6. | தொழிற்சாலை | - | Factory |
| 7. | இயந்திரம் | - | Machine |
| 8. | மிதிவண்டி | - | Bicycle |
| 9. | விமானம் | - | Airplane |
| 10. | உப்பு | - | Salt |
| 11. | தொழில்நுட்பம் | - | Technology |
| 12. | பருத்தி ஆலை | - | Cotton mill |

## 19.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கதையைப் படித்து, தொடர்ந்து கூறுக.**



ஓர் ஊரில் வளவனும் மாறனும் அருகருகே வசித்து வந்தனர். அவர்கள் மிகவும் ஒற்றுமையாகத்தான் இருந்தனர். இருவர் வீட்டுக்கும் இடையில் மாங்கன்று ஒன்று வளர்ந்தது. சில ஆண்டுக்குப்பின், அது மரமாகி, பூக்கத் தொடங்கியது. வளவன் ஒருநாள், அந்த மாமரம் தனக்குத்தான் என்று கூற, மாறனும் உரிமை கொண்டாட இருவருக்கும் இடையே சண்டை மூண்டது. அப்போது..........

## 19.11 செயல்திட்டம்

மிதிவண்டியில் பயணம் செய்து, மிதிவண்டிப் பயணச் செயலியின் மூலம் புள்ளியியல் விவரங்கள் தயாரித்து வருக.

## 20.1 பேசுவோம்

பாடம் 20



## கலந்துரையாடுவோம்

படத்திலுள்ள ஆய்வகங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 20.2 படிப்போம்

# கலீலியோவும் ஜேம்ஸ்வாட்டும்

(இருபெரும் அறிவியல் அறிஞர்கள் சந்தித்துப் பேசுவதுபோல், கற்பனை உரையாடல்)

**கலீலியோ கலீலி** : ஜேம்ஸ்வாட். உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி.

**ஜேம்ஸ்வாட்** : வணக்கம். கலீலியோ, எனக்கும் மகிழ்ச்சிதான்.

**கலீலியோ கலீலி** : நீங்கள் நீராவி இயந்திரத்தின் மூலம் தொழிற்புரட்சியையே ஏற்படுத்தி விட்டீர்கள்.

**ஜேம்ஸ்வாட்** : அப்படியொன்றுமில்லை. தாமஸ் நியூகோமனின் நீராவி இயந்திரத்தில் சில மாற்றங்களைச் செய்தேன்.

**கலீலியோ கலீலி** : என்ன மாற்றங்களைச் செய்தீர்கள்?

**ஜேம்ஸ்வாட்** : சக்கரம் பொருத்தப்பட்ட ஓர் அமைப்பையும், உந்து தண்டினை (piston) மேலும் கீழும் சுழலும் (rotory) முறையையும் உருவாக்கினேன். அந்த மாற்றங்களால் இயந்திரத்தின் ஆற்றல் பலமடங்கு பெருகியது. இதனால் நீராவி இயந்திரத்தின் தேவை அதிகரித்தது.



**கலீலியோ கலீலி** : அருமை, அருமை.

**ஜேம்ஸ்வாட்** : ஆமாம். உங்களுடைய கண்டுபிடிப்பைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**கலீலியோ கலீலி** : என்னுடைய சிறுவயதில் ஓர் அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவம்தான் ஊசல் கடிகாரம் கண்டுபிடிக்கத் தூண்டியது.

**ஜேம்ஸ்வாட்** : அப்படியா? அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**கலீலியோ கலீலி** : மாதா கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கே கண்ணாடியால் ஆன விளக்குகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவை காற்று வீசும்போது இப்படியும் அப்படியும் அசைந்தன. இடப்பக்கம், வலப்பக்கம் சென்று வர எத்தனை மணித்துளி ஆகிறது எனக் கணக்கிட்டேன். இரண்டுக்கும் ஒரே நேரம் ஆனது.



**ஜேம்ஸ்வாட்** : நேரத்தை எப்படிக் கணக்கிட்டீர்கள்? உங்கள் காலத்தில்தான் கடிகாரம் இல்லையே?

**கலீலியோ கலீலி** : ஆமாம். ஆனால், என்னுடைய நாடித் துடிப்பைக் கொண்டு, இருபக்கமும் விளக்கு சென்றுவரும் நேரத்தைக் குறித்துக்கொண்டேன்.

**ஜேம்ஸ்வாட்** : நீங்கள் வேறு என்ன கண்டுபிடித்தீர்கள்?

**கலீலியோகலீலி** : வானத்தைப் பார்ப்பதற்காகத் தொலைநோக்கி (Telescope) கண்டறிந்தேன். உடலின் வெப்பத்தை அறிந்துகொள்ள, வெப்பமானியைக் கண்டுபிடித்தேன்.




**ஜேம்ஸ்வாட்** : மிகச் சிறப்பு. புதிய கண்டுபிடிப்புகள் நமக்குள் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன. நன்றி. நாம் மீண்டும் சந்திப்போம்.

## பொருள் அறிவோம்

1. நீராவி இயந்திரம் - நீராவியில் உள்ள வெப்ப ஆற்றலைப் பயன்படுத்தி எந்திர ஆற்றலாக மாற்றும் கருவியாகும்.

2. தொலைநோக்கி - தொலைவில் உள்ள பொருள்களைத் தெளிவாகப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் ஆடிகள் பொருத்திய குழல் வடிவக் கருவி.

# பயிற்சி

## விடை காண்போம்

1. நீராவி இயந்திரத்தை வடிவமைத்தவர் யார்?
2. நீராவி இயந்திரத்தில் வாட் செய்த மாற்றம் என்ன?
3. கலீலியோவின் கண்டுபிடிப்புகளைக் கூறுக.
4. ஊசல் கடிகாரம் எதன் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டது?
5. வெப்பமானி எதற்குப் பயன்படுகிறது?

## 20.3 பாடிமகிழ்வோம்

### ஓதுவது ஒழியேல்

பள்ளிக் கூடம் சென்றங்கே
படித்தால் போதும் என்றெண்ணித்
துள்ளி ஓடி விளையாட்டே
துணையாய்க் காலம் போக்காதே.
மாலைப் போதில் விளையாடு
மற்றப் போதில் அறிவுதரும்
நூலைத் தேர்ந்து படித்திடுவாய்
நோயாம் மடமை போக்கிடுவாய்.
பள்ளிப் பருவம் சென்றபினும்
படிக்கும் பழக்கம் நிறுத்தாதே
வெள்ளக் கடல்போல் விரிந்திருக்கும்
வித்தை நூல்கள் பலகற்பாய்.

- நாரா நாச்சியப்பன்



## 20.4 தெரிந்துகொள்வோம்

### உவமைத்தொடர்கள்



தாய் தன் குழந்தையைக் **கண்ணை இமை காப்பதுபோலப்** பாதுகாத்தாள்.



கண்ணனுக்கு ஓட்டப்போட்டியில் முதற்பரிசு கிடைக்காததால், அவன் **கப்பல் கவிழ்ந்தாற்போல** வருத்தமுற்றான்.



மதியும் மொழியும் **நகமும் சதையும்போல** இணைபிரியாமல் ஒற்றுமையாக இருந்தனர்.



பரிதியும் கதிரவனும் **கீரியும் பாம்பும்போல** எப்போது பார்த்தாலும் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர்.




ஆசிரியர் நடத்துகின்ற பாடம் **பசுமரத்தாணிபோல** மனத்தில் பதிகிறது.

### உவமைத்தொடர்களும் அவை உணர்த்தும் பொருள்களும்

| வ.எண் | உவமைத்தொடர் | உணர்த்தும் பொருள் |
|---|---|---|
| 1 | கண்ணை இமை காப்பதுபோல | பாதுகாப்பு |
| 2 | கப்பல் கவிழ்ந்தாற்போல | வருத்தம் |
| 3 | நகமும் சதையும்போல | ஒற்றுமை |
| 4 | பசுமரத்தாணிபோல | நிலைபேறு |
| 5 | கீரியும் பாம்பும்போல | பகை |
| 6 | மழைமுகம் காணாப் பயிர்போல | துன்பம் |
| 7 | தாயைக் கண்ட சேயைப்போல | மகிழ்ச்சி |
| 8 | குடத்திலிட்ட விளக்குப்போல | சிலரால் மட்டுமே அறியப்படுதல் |
| 9 | அடியற்ற மரம்போல | பேரிழப்பு |
| 10 | மலரும் மணமும்போல | இணைபிரியாமை |
| 11 | சூரியனைக் கண்ட பனிபோல | துன்பம் விலகுதல் |
| 12 | பசுத்தோல் போர்த்திய புலிபோல | ஏமாற்றுதல் |
| 13 | காட்டுத்தீயைப்போல | விரைவாகப் பரவுதல் |
| 14 | அனலில் இட்ட மெழுகுபோல | துயரம் |
| 15 | குன்றின் மேலிட்ட விளக்குப்போல | அனைவராலும் அறியப்படுதல் |

## பயிற்சிகள்

**அ) பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான உவமைத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

1. கண்மணி சிறுவயதில் கற்றுக்கொண்ட ஆத்திசூடிப் பாடல்கள், அவள் மனத்தில் ________________ போல நன்கு பதிந்தன. (அடியற்றமரம்/ பசுமரத்தாணி)

2. தேர்வு நேரத்தில் புத்தகத்தைத் தொலைத்த கவினுக்கு அவன் நண்பன் புத்தகம் கொடுத்து உதவியதால், கவினின் துன்பம் ________________ போல விலகியது. (சூரியனைக் கண்ட பனி/ மழைமுகம் காணாப் பயிர்)

3. அயல்நாட்டில் பணிபுரியும் தந்தை நெடுநாள் கழித்து வீட்டிற்கு வந்ததும் கபிலன் ________________ போல மகிழ்ச்சி அடைந்தான். (கண்ணை இமை காப்பது/ தாயைக் கண்ட சேயைப்)

**ஆ) உவமைத்தொடரையும் பொருளையும் பொருத்துக.**

| | உவமைத்தொடர் | | பொருள் |
|---|---|---|---|
| | **உவமைத்தொடர்** | - | **பொருள்** |
| 1. | காட்டுத்தீயைப்போல | - | பாதுகாப்பு |
| 2. | அனலில் இட்ட மெழுகுபோல | - | விரைவாகப் பரவுதல் |
| 3. | பசுத்தோல் போர்த்திய புலிபோல | - | மகிழ்ச்சி |
| 4. | கண்ணை இமை காப்பதுபோல | - | துயரம் |
| 5. | தாயைக் கண்ட சேயைப்போல | - | ஏமாற்றுதல் |

**இ) பின்வரும் உரையாடலில் பொருத்தமான உவமைத்தொடரைப் பயன்படுத்துக.**

1. அம்மா: முகிலன், மணி ஏன் இப்படி எப்போது பார்த்தாலும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள்?

இருவரும் ________________ ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

1. கீரியும் பாம்பும்போல
2. எலியும் பூனையும்போல
3. நகமும் சதையும்போல

2. ஆசிரியர்: மாணவர்களே, பள்ளிகளுக்கு இடையேயான பேச்சுப்போட்டியில் நம் வகுப்பு மாணவன் வெற்றி பெற்றுள்ளதால், அவனது திறமை ________________ எல்லாருக்கும் தெரிந்தது.

1. குன்றின் மேலிட்ட விளக்குப்போல
2. குடத்தில் இட்ட விளக்குப்போல
3. சூரியனைக் கண்ட பனிபோல

## 20.5 மொழியோடு விளையாடுவோம்

**பின்வரும் சொற்களில் ஓரெழுத்து நீக்கினால் உணவுப்பொருள் கிடைக்கும். அதனைக் கண்டுபிடித்து எழுதுக.**

எ.கா.

| | | | |
|---|---|---|---|
| பாடல் | பா | ல் | |
| உழைப்பு | | | |
| அட்டை | | | |
| கணினி | | | |
| கரும்பு | | | |
| அலுவல் | | | |

## தகவல் துளி

**பறவையைக் கண்டனர்: விமானம் படைத்தனர்**




பறவைகளைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றும்? இறக்கை இருந்தால் நாமும் பறக்கலாம் என்றுதானே தோன்றும். உங்களைப்போலத்தான் ரைட் சகோதரர்களும் நினைத்தார்கள். பறக்கும் விமானத்தைக் கண்டுபிடித்தார்கள். முதன்முதலில் 1903 டிசம்பர் 17 இல் பூமிக்குமேல் 12 வினாடிகளில் 120 அடி தூரம்வரை பறந்து சாதனை படைத்தார்கள். இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் இக்கண்டுபிடிப்பிற்காகவே அர்ப்பணித்தார்கள். அவர்கள்தாம் ஓர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற சகோதரர்கள்.

## கருத்து விளக்கப்படம்




## வினாக்கள்

1. இணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் மையப்பொருள் என்ன?
2. மாநாட்டு நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனம் எது?
3. நிகழ்ச்சி எதன் வாயிலாக நடைபெறுகிறது?
4. நிகழ்ச்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
5. நிகழ்ச்சி எத்தனை மணிக்குத் தொடங்குகிறது?

## 20.6 கேட்டல் கருத்தறிதல்.

### கதை – கூகுள் வரைபடம்




மணியும் முல்லையும் தம் பெற்றோருடன் மகிழுந்தில் பயணம் செய்தனர். செல்லும் வழியில் சிறிய அருவி ஒன்று இருப்பதை அறிந்தனர். ஆகையால், அந்த அருவியைக் காண விரும்பினர். ஆனால், அவர்கள் செல்லும் வழி சற்றுக் கரடுமுரடாக இருந்தது. மேலும், சுற்றிலும் மரம், செடி, கொடிகள் அடர்ந்து இருந்தன. மகிழுந்திலிருந்து இறங்கிச் சற்றுத் தொலைவு நடந்தே சென்றனர். அங்கு மலையிலிருந்து விழும் அருவி நீர் ஆர்ப்பரித்துப் பாறைகளின் மீது பட்டுத் தெறித்தது. மணியும் முல்லையும் பெற்றோரின் மேற்பார்வையில் அருவியில் குளித்து மகிழ்ந்தார்கள். இதனால் நேரம் போனதே தெரியவில்லை. அங்கு ஏற்கெனவே இருந்தவர்களும் வெளியேறத் தொடங்கிவிட்டனர். மாலை நேரம் முடிந்து, இருள் பரவத் தொடங்கியது. பெற்றோர் மணியையும் முல்லையையும் அழைத்துக்கொண்டு விரைவாக மகிழுந்தை நோக்கி நடந்தனர். மகிழுந்தில் ஏறி அமர்ந்தனர். மரங்கள் அடர்ந்து இருந்ததால், வந்த பாதையைக் கண்டறிய முடியவில்லை. அப்போது மணியின் அப்பா, சட்டெனக் கூகுள் வரைபடத்தின் உதவியை நாடினார். ஒருவழியாக அந்த இடத்தைவிட்டு, நால்வரும் வெளியேறினர். அஃது அவர்களுக்கு மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது.

### வினாக்கள்

1. மணி, தன் பெற்றோருடன் பயணம் செய்த வண்டி எது?
2. அருவிக்குச் செல்லும் வழி எவ்வாறு இருந்தது?
3. அருவி இருக்கும் பகுதி எப்படி இருந்தது?
4. மணியின் அப்பா கூகுள் வரைபடத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்?
5. இரவு நேரங்களில் நாம் தனித்துச் செல்லும்போது, நம்மை நாமே எப்படிப் பாதுகாத்துக் கொள்ளலாம்?

## 20.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 20.8 செந்தமிழ்ச்செல்வம்

### மூதுரை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று

(பாடல்-8)
– ஔவையார்

(நல்லார் - நல்ல பண்பு உடையவர்; காண்பது - பார்ப்பது; இணங்கி - மனம் ஒத்து)

**பொருள்:**

நல்ல பண்பு உடையவர்களைக் காண்பதும் நல்லது. அவர்தம் பயன் நிறைந்த சொல்லை கேட்பதும் நல்லது. அவர்தம் பண்புகளைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதும் நல்லது. அவரோடு நட்பாகச் சேர்ந்திருப்பதும் நல்லது.

## 20.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நீராவி இயந்திரம் | - | Steam Engine |
| 2. | தேநீர் | - | Tea |
| 3. | தூண்டுதல் | - | Stimulation |
| 4. | சமையல் அறை | - | Kitchen |
| 5. | ஆர்வம் | - | Interest |
| 6. | வினாக்கள் | - | Questions |
| 7. | கண்டுபிடிப்பு | - | Invention |
| 8. | ஊசல் கடிகாரம் | - | Pendulum Clock |
| 9. | கண்ணாடி | - | Glass |
| 10. | விளக்குகள் | - | Lamps |
| 11. | நாடித்துடிப்பு | - | Pulse |
| 12. | தொலைநோக்கி | - | Telescope |
| 13. | வானம் | - | Sky |
| 14. | வெப்பமானி | - | Thermometer |

## 20.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**1. விடுபட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை நிரப்பிக் கடிதத்தை நிறைவு செய்க.**

32/10 அறிஞர் அண்ணா தெரு,
தஞ்சாவூர்.

அன்புள்ள மஞ்சு,

நான் இங்கு நலம். என் குடும்பத்தினர் அனைவரும் நலமாக உள்ளனர். அதே போன்று நீயும் உன் ________________ நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அண்மையில் நான் சென்னையிலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்றிருந்தேன். இந்நூலகத்தில் எட்டுத் ________________ உள்ளன. அங்கு இலட்சக்கணக்கான ________________ இருக்கின்றன. இங்குப் ________________ தேர்வுகள் எழுதுபவர்களுக்காக எண்ணற்ற புத்தகங்கள் உள்ளன. இந்நூலகம் “உலக ________________ மின்நூலகத்துடன்” (World Digital Library) இணைக்கப்பட்டுள்ளது. உனக்கு ________________ கிடைத்தால் ஒருமுறை இந்நூலகத்தைப் பார்வையிட வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
பாரதி.

(போட்டித், வாய்ப்பு, தளங்கள், இணைய, புத்தகங்கள், குடும்பத்தினரும்)

## 20.11 செயல்திட்டம்

வீட்டில் பயன்படுத்தப்பட்ட அட்டைப்பெட்டி, நெகிழிக்கிண்ணம், தீப்பெட்டிகளைக் கொண்டு, விளையாட்டுச் செல்பேசியை உருவாக்கி வருக.

## 21.1 பேசுவோம்

# பாடம் 21



### கலந்துரையாடுவோம்

இன்றைய நிலையில் தகவல் தொடர்புச் சாதனங்களின் பயன்கள் குறித்து வகுப்பில் ஆசிரியரோடு கலந்துரையாடுக.

## 21.2 படிப்போம்

### கணினி




அறிவியல் கண்டுபிடிப்புகள் புதுமையின் அடையாளம். அறிவியலின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு கணினி. 1843இல் இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லஸ் பாபேஜ் என்பவர், கணிதச் செயல்பாட்டுக்காகப் புதிய கருவியை வடிவமைத்தார். இதுவே கணினி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. அதனால், இவரைக் 'கணினியின் தந்தை' என்று போற்றினர். முதன்முதலில் உருவாக்கப்பட்ட கணினி அளவிலும் உருவத்திலும் மிகப் பெரியதாக இருந்தது. பல தலைமுறைக்குப் பின்னரே இன்று கையடக்கக் கணினியாக வளர்ச்சி பெற்றுள்ளது. கணினியில் மேசைக் கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி எனப் பல வகைகள் உள்ளன. அன்றாட வாழ்வில் கணினி மிகவும் பயன்படுகிறது. கணினியுடன் இணையத்தை இணைத்தால், உடனுக்குடன் பல செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது. உலகின் ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வை உடனுக்குடன் பார்க்கவும் முடிகிறது. கல்வித்துறையில் கணினிவழிக் கல்வி மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது; ஒரே நேரத்தில் பலரையும் ஒருங்கிணைக்கிறது; கற்றல் கற்பித்தலை எளிதாக்குகிறது.

## பொருள் அறிவோம்

1. இணையம் – தகவல் வலையம்
2. வலுவூட்டுதல் – வலிமை பெறச் செய்தல்

## விடை காண்போம்

1. அறிவியலின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எது?
2. கணினியின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
3. தொடக்கத்தில் கணினி எதற்குப் பயன்பட்டது?
4. கணினியின் பயன்களைக் கூறுக.
5. கணினியின் வகைகளுள் நீங்கள் அறிந்தவற்றைக் கூறுக.

## 21.3 பாடிமகிழ்வோம்

### செந்தமிழா, ஒரு வார்த்தை!

அணுப்பொறியில்
உன் அறிவைத் தீட்டு - நீ
அறிவியலில்
உன்புகழை நீட்டு!
கணிப்பொறியில்
புதுமைகளைக் கூட்டு- உன்
கைத்திறனை
உலகறியக் காட்டு!

- தாராபாரதி



## 21.4 தெரிந்துகொள்வோம்

### ஒரு சொல் பல பொருள்













மாடிப் படி
படி
அளவை
நூலைப்
படி


பாலாடை
புத்தக இதழ்
ஏடு
பனையேடு
பூவிதழ்


குதிரை
மாம்பழம்
மா
மாவு
மாமரம்
பெருமை

## பயிற்சிகள்

**(அ) கீழேயுள்ள சொற்களுக்குப் பல பொருள் தருக.**

1. மா

2. படி

3. ஏடு

4. அணி

5. கா

**(ஆ) இரு தொடருக்குப் பொருந்தும் ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(மாலை, மதி, அன்னம், ஞாயிறு, ஆடு)

<table>
<tr><td>வயலில் மேய்வது</td><td rowspan="2">ஆடு</td></tr>
<tr><td>அழகாய் நடனம்</td></tr>
<tr><td>பூக்களைத் தொடுத்தால்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>அந்தி சாயும் பொழுது</td></tr>
<tr><td>சோற்றின் மறுபெயர்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>அழகிய பறவை</td></tr>
<tr><td>வாரத்தின் முதல் நாள்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>கதிரவனின் மறுபெயர்</td></tr>
<tr><td>மாலையில் தோன்றும்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>பெரியோரை எப்போதும்</td></tr>
</table>

## 21.5 மொழியோடு விளையாடுவோம்

**கட்டத்திலுள்ள சொற்களைப் பந்துகளோடு இணைத்து எழுதுக.**




1. உயரமான மலை  2. ____________  3. ____________

4. ____________  5. ____________

### சுவைச்செய்தி

தட்டச்சு செய்வதில் இடக்கையைப் பயன்படுத்தி மட்டுமே தட்டச்சு செய்யும் மிகப்பெரிய சொல் stewardesses. தட்டச்சுப் பலகையில் ஒரே வரிசையிலுள்ள (மேல் வரிசையில்) எழுத்துகளைப் பயன்படுத்தி Typewriter என்ற சொல்லை அடிக்கிறோம் என்பது வியப்புக்குரியது.

## 21.6 கேட்டல் கருத்தறிதல்

### விண்வெளிக் கழிவுகள்



விண்வெளியில் இயற்கையாகவும் செயற்கையாகவும் கழிவுகள் காணப்படுகின்றன. இவற்றை விண்வெளிக் கழிவுகள் அல்லது விண்வெளிக் குப்பைகள் என்கிறோம். இவை காஸ்மிக் குப்பைகள் என்றும் அறியப்படுகின்றன. விண்கற்கள், எரிநட்சத்திரத் தூசுகள் ஆகியன இயற்கை விண்வெளிக் கழிவுகள். விண்ணுக்கு அனுப்பப்பட்டுச் செயலிழந்த செயற்கைக்கோள்கள், அவற்றின் உடைந்த பகுதிகள் ஆகியன செயற்கை விண்வெளிக் கழிவுகள் ஆகும். இக்கழிவுகள், விண்வெளியை மாசுபடுத்துகின்றன. விண்வெளி ஆய்வுக்கும் இவை அச்சுறுத்தலாக உள்ளன.

**வினாக்கள்**

1. விண்வெளிக் கழிவுகள் என்றால் என்ன?
2. விண்வெளிக் கழிவுகளைக் குறிப்பிடும் வேறு பெயர்களைக் கூறுக.
3. விண்வெளிக் கழிவுகளின் வகைகள் யாவை?
4. செயற்கை விண்வெளிக் கழிவுகளை யார் உருவாக்குகிறார்கள்?
5. விண்வெளிக் கழிவுகளால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன?

## 21.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்






## 21.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

(குறள் - 423)

-திருவள்ளுவர்

(மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்; காண்பது - அறிந்துகொள்வது )

**பொருள்:**

எப்பொருளை யார் கூறக் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அதன் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

## 21.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கணினி | - | Computer |
| 2. | தலைமுறை | - | Generation |
| 3. | இணையம் | - | Internet |
| 4. | செய்தி | - | News |
| 5. | நிகழ்வு | - | Event |
| 6. | மாற்றம் | - | Change |
| 7. | ஒரே நேரம் | - | Same time |
| 8. | ஒருங்கிணைக்கிறது | - | Coordinates |
| 9. | மடிக்கணினி | - | Laptop |
| 10. | மேசைக்கணினி | - | Desktop |

## 21.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் படத்திற்குப் பொருத்தமாக மூன்று தொடர் கூறுக.**



எ.கா. மரத்தின் அருகே பறவைகளும் விலங்குகளும் உள்ளன.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

## 21.11 செயல்திட்டம்

கணினியின் மாதிரியைச் செய்து வருக.

## 22.1 பேசுவோம்

பாடம்
22










### கலந்துரையாடுவோம்

இயந்திரப் பொம்மைகள் எவற்றிற்கெல்லாம் பயன்படுகின்றன என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக.

## 22.2 படிப்போம்

### தன்னிகரில்லாத் தாரா



**பேராசிரியர் செழியன்** : வெற்றி! வெற்றி! என் 40 ஆண்டு கனவு இன்று நனவாகிவிட்டது.

: இனிய தாரா! என் அரிய கண்டுபிடிப்பு நீ! இனிப் பிறர் பேசுவதை உன்னால் உணரமுடியும்.

: சுற்றுச்சூழல் தொழில்நுட்பக் கண்காட்சியில் உன்னை அறிமுகப்படுத்தப் போகிறேன். உன் பெருமையை அனைவருக்கும் உணர்த்துகிறேன்.

: அழகிய இயந்திரப் பொம்மையைப் பாருங்கள். இதன் பெயர் தாரா. இதன் சிறப்பு என்ன தெரியுமா? பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளும்.

**நிகழ்ச்சி அமைப்பாளர்** : மகிழ்ச்சி, ஐயா! உங்களுடைய அரிய கண்டுபிடிப்பை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்.

**பேராசிரியர் செழியன்** : நானும் மிக ஆவலுடன் இருக்கிறேன். அதோ, அந்த மரத்தில் பறவைகள் உள்ளன. அவை என்ன பேசுகின்றன என்பதை என் தாரா கூறுகிறதா எனப் பார்ப்போம்.

**தாரா** : எல்லாரும் கேளுங்கள். அந்தப் பறவைகள் என்ன பேசிக் கொண்டன தெரியுமா? "மனிதர்கள் காடுகளின் அருமை தெரியாமல் அவற்றை அழிக்கின்றனர். நம் இருப்பிடமே இதுதான் என்பதை எப்போதுதான் புரிந்துகொள்வார்களோ?" என்று பேசின.

| | | |
|---|---|---|
| **பார்வையாளர்கள்** | : | ஆ! என்ன ஆச்சரியம்! இந்த இயந்திரப் பொம்மை பேசுகிறதே! |
| **பேராசிரியர் செழியன்** | : | தாரா பேசியதை அனைவரும் கேட்டீர்களா? மரங்கள் என்ன பேசுகின்றன எனத் தாரா கூறுகிறதா பார்ப்போம். |
| **தாரா** | : | "மழை பெய்வதற்கு நாம் காரணமாக இருக்கிறோம். மனிதர்களுக்குத் தூய காற்றும் இனிய கனிகளும் நாம் தருகிறோம். ஆனால், இவர்கள் நம்மை அழிக்க நினைக்கிறார்களே" என்று கூறின. |
| **நிகழ்ச்சி அமைப்பாளர்** | : | சிறப்பு, மிகச் சிறப்பு. தங்களுடைய அரிய கண்டுபிடிப்பை நாங்கள் அனைவரும் கண்டு வியக்கிறோம். தாவரங்கள், பறவைகள் ஆகியன பேசுவதைத் தாராவால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மனிதர்கள் பேசுவது, தாராவுக்குப் புரியுமா? |
| **தாரா** | : | ஓ! நன்றாகப் புரியும். இதோ பாருங்கள். அந்தப் பார்வையாளர். மற்றவரிடம் என்ன கூறினார் தெரியுமா? "இந்த இயந்திரப் பொம்மை பேசியதைக் கேட்டாயா? அது, சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பற்றிப் பேசுகிறது. நம்மைச் சுற்றியிருக்கும் உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறது. நாம் இனிமேலும் இயற்கையை அழியவிடாமல் காப்போம்" என்று கூறினார். அவர் இப்படிப் பேசினாரா, இல்லையா? என்று அவரையே கேளுங்கள். |
| **பார்வையாளர்கள்** | : | தாரா கூறியது உண்மைதான். நான் தான் அப்படிக் கூறினேன். உண்மையிலேயே பேராசிரியரின் கண்டுபிடிப்பு மிகச் சிறப்பு. (அனைவரும் எழுந்து நின்று கைகளைத் தட்டுகின்றனர்.) |

## பொருள் அறிவோம்

1. ஆச்சரியம் – வியப்பு
2. ஆவல் – விருப்பம்
3. இருப்பிடம் - வாழ்விடம்

## விடை காண்போம்

1. இயந்திரப் பொம்மையின் பெயர் என்ன?
2. இயந்திரப் பொம்மையை அறிமுகப்படுத்தியவர் யார்?
3. பேராசிரியர் செழியனின் கனவு யாது?
4. பறவைகள் பேசியதாகத் தாரா கூறியது என்ன?
5. இயந்திரப் பொம்மை நமக்கு அறிவுறுத்தும் செய்தி யாது?

## 22.3 பாடிமகிழ்வோம்

### நிலா! நிலா!

'நிலா நிலா ஓடிவா!
நில்லாமல் ஓடி வா!'
பல காலம் இப்படிப்
பாடிப் பயன் இல்லையே!

மலை மேலே ஏறிநீ
வருவாய் என்றே எண்ணினோம்
மல்லி கைப்பூக் கொண்டுநீ
தருவாய் என்றும் பாடினோம்

எத்தனை நாள் பாடியும்
ஏனோ நீயும் வரவில்லை
சத்தம் போட்டுப் பாடியும்
சற்றும் நெருங்கி வரவில்லை

உன்னை விரும்பி அழைத்துமே
ஓடி நீ வராததால்
விண்க லத்தில் ஏறியே
விரைவில் வருவோம் உன்னிடம்!

-அழ. வள்ளியப்பா





## 22.4 தெரிந்து கொள்வோம்

### மரபுத்தொடர்கள்

ஒரு சொல் அல்லது சொற்றொடர், அதன் நேர்பொருளை உணர்த்தாமல் வழிவழியாக வழங்கப்படும் வேறு பொருளைத் தருவது மரபுத்தொடர் ஆகும்.



வாழையடி வாழை

கண்ணனது குடும்பம் வாழையடிவாழையாகப் பயிர்த்தொழில் செய்து வருகிறது.



மல்லுக்கட்டுதல்

கண்ணன் சாப்பிட மாட்டேன் என்று தாயுடன் மல்லுக்கட்டினான்.



கை கொடுத்தல்

சின்னய்யா, மருத்துவச் செலவுக்குப் பணமின்றித் தவித்தபோது, இனியா கைகொடுத்தாள்.

## பயிற்சி

### பின்வரும் தொடர்களில் மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(வாழையடி வாழையாக, மல்லுக்கட்டினான், கைகொடுத்து)

1. சுற்றுலா செல்ல அனுமதிக்குமாறு, அப்பாவிடம் வருண் ______________.

2. என் முன்னோர் ______________ இந்த ஊரில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

3. கல்லூரியில் சேரமுடியாமல் வருந்திய கனிகாவுக்குத் தக்க சமயத்தில் மாதவி ______________ உதவினாள்.

## 22.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் முதல், இடை, கடை என எங்கு வேண்டுமானாலும் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல் உருவாக்குக.**




### தகவல் துளி


ஜூல்ஸ்வெர்ன்
(1828 - 1905)

கற்பனை செய்வது நம் எல்லாருக்கும் பிடிக்கும். இதோ, இவருடைய கற்பனையைப் பாருங்கள். இவர் கண்ட கற்பனைகள் பலவும் பிற்காலத்தில் உண்மையாயின. அவற்றுள், நிலவில் மனிதன் கால் பதித்ததையும் ஆழ்கடலுக்கு அடியில் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்ததையும் குறிப்பிடலாம். இவரது நூல்கள் கற்பனைக் கதையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு நுழைவாயிலாக இருந்தன. ஆகையால் இவரை "அறிவியல் புதினங்களின் தந்தை" என்று போற்றினர். இத்தகைய பெருமைக்கு உரியவர் யாரென்று தெரியுமா? அவர்தாம் பிரான்ஸ் நாட்டின் ஜூல்ஸ்வெர்ன்.

## 22.6 கேட்டல் கருத்தறிதல்

### கதை – அன்பு



ஆசிரியர், மாணவர்களுடன் காவிரி ஆற்றங்கரைக்குச் சுற்றுலா சென்றார். ஒரு குடுவையில் கூழாங்கற்களை நிரப்பிக்கொண்டு மாணவிகள் நின்றனர். அதனுள் வேறு எதுவும் இனி வைக்க முடியாது என்று தங்களுக்குள் கூறிக்கொண்டு இருந்தனர். அருகிலிருந்த ஆசிரியர், மாலதியை அழைத்துக் கீழிருந்த மணலை அள்ளிக் குடுவையில் போடச்சொன்னார். மணல் உள்ளே சென்றது எதுவுமே போட முடியாது என எண்ணியிருந்த மாணவிகள் திகைத்தனர். இதில் மேலும் என்ன சேர்க்கலாம் என்று ஆசிரியர் கேட்டார். இனி எதுவுமே சேர்க்க முடியாது என்று அனைவரும் கூறினர். ஆசிரியர் சிரித்துக்கொண்டே தம் கையிலிருந்த தண்ணீர்க் குடுவையை ரேவதியிடம் கொடுத்து ஊற்றச் சொன்னார். குடுவை தண்ணீரால் நிறைந்தது. மாணவிகள் எதுவும் சொல்ல முடியாமல் நின்றனர். அப்போது ஆசிரியர் பொருள்களால் வீட்டை நிறைக்கலாம். ஆனால் அன்பாலும், கருணையாலும் மட்டுமே வீட்டை முழுவதுமாக நிறைக்க முடியும் என்றார்.

#### வினாக்கள்

1. ஆசிரியரும் மாணவர்களும் சுற்றுலாவுக்கு எங்குச் சென்றனர்?
2. மாணவிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்?
3. ஆசிரியர் மாலதியிடம் என்ன கூறினார்?
4. தண்ணீரால் குடுவையை நிரப்பியது யார்?
5. கதை உணர்த்தும் நீதியைக் கூறுக.

## 22.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 22.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

-(குறள் 34)
-திருவள்ளுவர்

(மாசிலன் - குற்றம் இல்லாதவன்; ஆகுல - ஆரவாரம்)

**பொருள்:**
மனம் தூய்மையாக இருப்பதே அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரம் கொண்டவை.

## 22.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெற்றி | - | Victory |
| 2. | கனவு | - | Dream |
| 3. | நினைவு | - | Remembrance |
| 4. | கண்டுபிடிப்பு | - | Discovery |
| 5. | கண்காட்சி | - | Exhibition |
| 6. | பார்வையாளர்கள் | - | Audience |
| 7. | சிட்டுக்குருவி | - | Sparrow |
| 8. | சுற்றுச்சூழல் | - | Environment |
| 9. | உயிரினங்கள் | - | Living organism |
| 10. | இயற்கை | - | Nature |

## 22.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**ஒவ்வொரு வரியிலும் ஒரு பறவையின் பெயர் வருமாறு எழுதுக.**

(மயில், அன்னம், குயில், கிளி, கோழி, கழுகு)

**1. அழகு மயில் ஆடக்கண்டேன்**

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

6. ______________________________

## 22.11 செயல்திட்டம்

இயந்திரப் பொம்மையின் மாதிரி ஒன்றைச் செய்து வருக.

பாடம்

# 23

## 23.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் செய்யும் நற்செயல்கள், செய்யக் கூடாத செயல்களைப்பற்றி வகுப்பில் ஆசிரியரோடு கலந்துரையாடுக.

## 23.2 படிப்போம்

### அன்பே அறம்!



ஓர் ஊரில் குமரன் என்பவன், தன் பெற்றோருடன் வசித்து வந்தான். ஒரு நாள், அவனுடைய வீட்டுக் கதவு தட்டப்பட்டது. குமரன் கதவைத் திறந்தான். அங்கு மூவர் நின்று கொண்டிருந்தனர். நீங்கள் யார்? என்று குமரன் கேட்டான். ஒருவர், நான்தான் 'செல்வம்' என்றார். மற்றொருவர், நான்தான் 'வெற்றி' என்றார். மூன்றாவதாக இருப்பவர், நான்தான் 'அன்பு' என்றார். மூவரும் 'நாங்கள் உள்ளே வரலாமா?' என்று கேட்டனர். குமரனுடைய தந்தை, 'அனைவரும் வாருங்கள்' என்று கூறினார். 'நாங்கள் மூவரும் ஒன்றாக வரமாட்டோம். யாராவது ஒருவர் மட்டுமே வரமுடியும். உங்களுக்கு யார் வேண்டுமோ? அவரை அழைத்துக் கொள்ளுங்கள்' என்று மூவரும் கூறினர்.

குமரனின் தந்தை 'வெற்றியை அழைத்தால் வெற்றியடையலாம்' என்றார். குமரனோ, 'செல்வத்தை அழைத்தால் வெற்றி உட்பட அனைத்தையும் வாங்கலாம்' என்றான். ஆனால், குமரனின் தாய் 'அன்பை அழைக்கலாம், அன்புதான் அனைவருக்கும் தேவை. அன்பிருந்தால் அங்கு எல்லாம் இருக்கும்' என்றாள். தந்தையும் மகனும் ஏற்றுக்கொண்டனர். பின்னர், மூவரும், 'அன்பு' நீங்கள் உள்ளே வாருங்கள்' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அன்பு உள்ளே வர, தொடர்ந்து வெற்றியும், செல்வமும் புன்முறுவலுடன் வீட்டிற்குள் நுழைந்தனர்.

## பொருள் அறிவோம்

1. பெற்றோர் – தாய், தந்தை
2. ஏற்றுக்கொண்டனர் - ஒப்புக்கொண்டனர்
3. புன்முறுவல் - மென்மையாகச் சிரித்தல்

## விடை காண்போம்

1. குமரன் வீட்டிற்கு யாரெல்லாம் வந்தார்கள்?
2. குமரனின் தந்தை யாருக்கு முதன்மை அளித்தார்?
3. தந்தை கூறியதைக் கேட்டு, குமரன் என்ன கூறினான்?
4. மூவருள் மிகவும் இன்றியமையாதவர் எனக் கூறப்பட்டவர் யார்?
5. 'அன்பை' அழைத்ததற்குக் குமரனின் தாய் கூறிய காரணம் என்ன?

## 23.3 பாடிமகிழ்வோம்

### அன்பு

அன்பு செயின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலாராம்
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வா விடமும் அமுதாகும்
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதும் விடமாமே!

- கவிமணி தேசிக விநாயகனார்

## 23.4 தெரிந்து கொள்வோம்




**பல சொல் ஒரு பொருள்**

| பல சொல் | ஒரு பொருள் |
|---|---|
| சந்திரன், மதி, அம்புலி, திங்கள் | நிலா |
| கதிரவன், பகலவன், வெய்யோன், ஞாயிறு | சூரியன் |

| | |
|---|---|
| மகவு, குழவி, சேய், சிசு, பிள்ளை, மழலை | குழந்தை |
| ஊண், ஆகாரம், அடிசில், உண்டி | உணவு |
| மன்னன், வேந்தன், கோன், புரவலன், இராஜா, கோ | அரசன் |
| வேழம், பகடு, கரி, கைம்மா, களிறு | யானை |
| வையம், பார், புவி, பூமி, ஞாலம், வையகம், நானிலம் | உலகம் |
| ஏரி, குளம், குட்டை, கடல், ஊருணி, தடாகம், கிணறு | நீர்நிலை |

## பயிற்சிகள்

**அ) பின்வரும் படத்தைக் குறிக்கும் பல சொல்லைக் கண்டறிந்து எழுதுக.**



**ஆ) பொருத்துக.**

1. சூரியன், பகலவன், ஞாயிறு - யானை
2. புவி, ஞாலம், வையம் - நீர்நிலை
3. மன்னன், வேந்தன், கோ - கதிரவன்
4. வேழம், கரி, களிறு - உலகம்
5. ஏரி, குளம், கடல் - அரசன்

## 23.5 மொழியோடு விளையாடுவோம்

**பின்வரும் சொல் அடுக்குகளில் எத்தனை சொற்கள் இணைந்துள்ளன? கண்டுபிடியுங்கள்.**

எ.கா. புத்தகம்பளிங்கும்பம் - புத்தகம், கம்பளி, பளிங்கு, கும்பம்




1. குடும்பம்பரம்பரை -
2. தங்கம்புதுமை -
3. வகுப்புத்தகம்பிள்ளை -

## சுவைச்செய்தி

பதினெண் கீழ்க்கணக்கைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பதினெட்டு நூல்கள் கொண்ட தொகுப்புதான் அது. இந்நூலில் மருத்துவப்பெயரைக் கொண்டுள்ள நூல்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

**திரிகடுகம்** – (திரி – மூன்று) சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் உடல்நலம் காக்கும். அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் மனநலம் காக்கும் மூன்று அறக்கருத்துகள் இருக்கும்.

**சிறுபஞ்சமூலம்** – (பஞ்சம்-ஐந்து) கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் உடல்நோயைத் தீர்க்கும். அதுபோல, ஒவ்வொரு பாடலிலும் மனநோயைப் போக்கும் ஐந்து அறக்கருத்துகள் இருக்கும்.

**ஏலாதி** – ஏலம், இலவங்கப்பட்டை, நாகசேகரம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறும் உடலுக்கு நன்மை தரும். அதுபோல, இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலும் மனத்திற்கு நன்மை தரும் ஆறு அறக்கருத்துகள் இருக்கும்.

## கருத்து விளக்கப்படம்




**வினாக்கள்**

1. விளம்பரத்தில் காணும் நிகழ்வு யாது?
2. நிகழ்வை நடத்தும் அமைப்பின் பெயர் என்ன?
3. நிகழ்வு எங்கு நடைபெறுகிறது?
4. நிகழ்வை எத்தனை மணிநேரம் காணலாம்?

## 23.6 கேட்டல் கருத்தறிதல்

### நரியின் தந்திரம்



ஒருவன் காட்டில் விறகு வெட்டிக்கொண்டு இருந்தான். அப்பொழுது காட்டில் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. இச்சத்தத்தைக் கேட்டு அவன் பயந்து ஓடினான். சிங்கம் 'மனிதனே ஏன் பயப்படுகிறாய்? உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்' என்றது. 'மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுதலை செய். நான் உனக்குப் பல உதவிகள் செய்வேன்,' என்று அது கூறியது. சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பி மனிதன் கூண்டைத் திறந்துவிட்டான். சிறிது நேரத்திற்குள் அது, மனிதன்மேல் பாயத் தயாரானது. இதனையறிந்த மனிதன், 'நீ செய்வது சரியா? இதுதானா நீ காட்டும் நன்றி?' என்றான். அப்பொழுது அவ்வழியாக ஒரு நரி வந்தது. நடந்ததை அறிந்தது. மனிதனுக்கு உதவி செய்ய நினைத்தது. சிங்கத்திடம், நடந்ததை முதலிலிருந்து செய்து காட்டுமாறு கூறியது. அப்பொழுது சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று நரி கூண்டைப் பூட்டியது. நன்றி மறந்த சிங்கம், தன் தவற்றை எண்ணி வருந்தியது.

**வினாக்கள்**

1. மனிதன் காட்டில் என்ன செய்து கொண்டிருந்தான்?
2. சிங்கம், மனிதனிடம் என்ன கேட்டது?
3. மனிதனுக்கு உதவி செய்ய நினைத்தது யார்?
4. யாருடைய பேச்சை உண்மையென்று நம்பினான் மனிதன்?
5. இக்கதையின் நீதி யாது?

## 23.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 23.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருவள்ளுவ மாலை

தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும் வளநாட - வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி

- கபிலர்

(அளகு - பறவை; வள்ளை - ஒரு வகைப் பாடல்)

**பொருள்:**

வீட்டுப் பறவைகள் வள்ளைப்பாட்டைக் கேட்டு உறங்கும் வளமையான நாட்டுக்கு அரசனே! புல்லின் நுனியில் இருக்கும் சிறு பனித்துளி, உயரமான பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் அடக்கிக்காட்டும். அதுபோல, திருவள்ளுவரின் திருக்குறளானது, இரண்டே அடியில் உலக மக்கள் அனைவருக்கும் பயன்தரும் அரிய பல கருத்துகளை அடக்கியுள்ளது.

## 23.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அறம் | - | Morality |
| 2. | பெற்றோர் | - | Parents |
| 3. | செல்வம் | - | Wealth |
| 4. | மகிழ்ச்சி | - | Happiness |
| 5. | புன்முறுவல் | - | Smile |

## 23.10 படைப்பாற்றல் வளர்ப்போம்



சிங்கமும் மானும் பேசிக்கொள்வதைப் போலக் கற்பனை உரையாடல் உருவாக்குக.

சிங்கம் ____________________

மான் ____________________

சிங்கம் ____________________

மான் ____________________

## 23.11 செயல்திட்டம்

அறம் சார்ந்த நிகழ்வுகளை விளக்கும் படங்களைத் திரட்டி, தொகுப்பேடு உருவாக்குக.

## பாடம் 24

### 24.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படங்கள் உணர்த்தும் செயல்கள் குறித்துக் கலந்துரையாடுக.

## 24.2 படிப்போம்

### கைலாஷ் சத்தியார்த்தி



பொழுது புலர்ந்தது. இதிலென்ன புதுமை? வழக்கம்போலத்தானே விடிந்திருக்கும். ஆனால், அன்றைய பொழுது, பள்ளி செல்லாக் குழந்தைகளுக்குப் புது விடியலைத் தந்தது. புது விடியலா? அப்படி என்ன அந்தக் குழந்தைகளுக்குத் துன்பம்? யார் அதனை நீக்கினார்? அவரைப் பற்றி அறிந்துகொள்வோமா!

பேருந்து நிலையம்: அலுவலகம் செல்வோர் பரபரப்பாக இங்கும்அங்கும் ஓடிக்கொண்டு இருந்தனர். 'ரைட்', 'ரைட்' போகலாம் என்று நடத்துநர் ஊதலை ஊத, ஓட்டுநர் வண்டி ஓட்டத் தொடங்கினார். அப்போது, ஒரு சிறுவன், 'சார், சார், பேப்பர் வாங்கிக்கங்க சார்' என்று கெஞ்சிக் கொண்டே ஓடி வந்தான். ஜன்னலோர இருக்கையில் இருந்தவர், ஏதோ சிந்தனையில் இருந்தார். அச்சிறுவனின் குரல், அவருடைய சிந்தனையைக் கலைத்தது. 'இந்தச் சிறுவனுக்கு என்ன வயதிருக்கும்? இந்த வயதில் பள்ளி செல்லாமல், நாளிதழ் விற்கிறானே?' என்று அவர் மனம் எண்ணத் தொடங்கியது. பேருந்தும் வேகம் எடுத்தது. சிறுவனின் குரல் மெல்ல மெல்லக் காற்றில் கரைந்தது.

அச்சிறுவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தவர், மனம் வருந்தினார். இவனைப்போல் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கு எப்படியாவது உதவவேண்டும் என்று உறுதி கொண்டார். தம்மைப்போலவே எண்ணம் கொண்ட நண்பர்களுடன் இணைந்தார். பள்ளி செல்லாக் குழந்தைகளுக்குத் தேவையான பாடநூல்களை அளித்துப் பள்ளியில் சேர்த்தார். அவர்களின் படிப்புக்காகப் பொருளுதவி செய்தார்.

ஓராண்டு, ஈராண்டு அல்ல, முப்பதாண்டு காலமாக இந்தப் பணியைச் செய்து வருகிறார். தொண்டு நிறுவனம் ஒன்றைத் தொடங்கி, ஆயிரக்கணக்கான குழந்தைகள் படிப்பதற்கு உதவுகிறார். இவரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, 'இராபர்ட் கென்னடி மனித உரிமைகள் விருது' அளிக்கப்பட்டது. இவர், 2014ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை மலாலா என்ற சிறுமியுடன் பகிர்ந்து கொண்டார். இவர்தாம் கைலாஷ் சத்தியார்த்தி. இந்தியாவிலுள்ள மத்தியபிரதேசத்தில் பிறந்தவர்.

நோபல் பரிசு பெற்ற இவர் என்ன கூறினார் தெரியுமா? "குழந்தைகளின் நலனுக்காக நான் தொடர்ந்து போராடுவேன். குழந்தைகளே நாட்டின் எதிர்கால வளங்கள். அவர்களைக் காப்பதே நமது நோக்கமாக இருக்கவேண்டும்" என்றார். அவரது கூற்று, நூற்றுக்கு நூறு உண்மை. நாமும் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு, நம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம்.

## பொருள் அறிவோம்

1. புலர்ந்தது - விடிந்தது
2. புதுமை - வியப்பு
3. சேவை - தொண்டு
4. போராடுவேன் - பாடுபடுவேன்
5. நோக்கம் - குறிக்கோள்

## விடை காண்போம்

1. பேருந்து நிலையத்தில் சிறுவன் என்ன செய்து கொண்டிருந்தான்?
2. பேருந்தில் இருந்தவர், சிறுவனைப் பற்றி என்ன நினைத்தார்?
3. சிறுவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் கைலாஷ் சத்தியார்த்திக்கு எப்போது தோன்றியது?
4. கைலாஷ் சத்தியார்த்தி, சிறுவர்களுக்கு எவ்வாறெல்லாம் உதவினார்?
5. கைலாஷ் சத்தியார்த்தி பெற்ற விருதுகள் யாவை?

## 24.3 பாடிமகிழ்வோம்

### பாப்பா படி

பாப்பா பாப்பா படி !
பாட்டும் கதையும் படி!

அம்மா சுட்டாள் தோசை!
அதன்மேல் இல்லை ஆசை!

பாட்டும் கதையும் வேண்டும்!
படிப்பே அறிவைத் தூண்டும்!

விளக்கே இருளைப் போக்கும்!
வெளிச்சம் எங்கும் சேர்க்கும்!

படிப்பே மடமை ஓட்டும்!
பரந்த அறிவைக் கூட்டும்!

பாப்பா பாப்பா படி!
பணிவும் அன்பும் படி!

- பெருஞ்சித்திரனார்



## 24.4 தெரிந்து கொள்வோம்

### இணைமொழிகள்

ஓசைநயத்துடனும் பொருட்செறிவுடனும் அமைந்து இருசொல் இணைந்து வருவது இணைமொழி ஆகும்.




| | | |
|---|---|---|
| செடிகொடி | வாடிவதங்கி | இரவும்பகலும் |
| கண்ணும்கருத்தும் | அக்கம்பக்கம் | பேரும்புகழும் |
| சாக்குப்போக்கு | போற்றிப்புகழ்ந்து | ஓடிஆடி |
| நோய்நொடி | ஏழைஎளியவர் | கல்விகேள்வி |

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான இணைமொழியைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

(பேரும்புகழும், சாக்குப்போக்கு, அக்கம்பக்கம், வாடிவதங்கி, ஓடிஆடி)

1. நீரின்றிச் செடி ________________ உள்ளது.
2. நல்ல உடல்நலம் வேண்டுமெனில் ________________ வேலை செய்யவேண்டும்.
3. கவினும் நவீனும் சாலையைக் கடக்க ________________ பார்த்தனர்.
4. அறநூல்களுள் திருக்குறள் ________________ பெற்றது.
5. பொன்னி, விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளாமலிருக்க ________________ சொன்னாள்.

## ஆ) பின்வரும் தொடர்களில் இணைமொழிகளைக் கோடிட்டுக் காட்டுக.

1. நல்ல *பழக்கவழக்கங்களும்* உடற்பயிற்சியும் இருந்தால் *நோய்நொடியின்றி* வாழலாம்.
2. ஏழை எளியவர்களுக்கு நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும்.
3. நாட்டின் மன்னன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக இருக்கவேண்டும்.
4. மழை இல்லாமையால் பயிர்கள் வாடிவதங்கின.
5. பாரதியார் நாட்டின் விடுதலைக்காக இரவும் பகலும் அயராது உழைத்தார்.

## 24.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் இரு படங்களுக்கான சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக**

1. 

+  =

2.  +  =

3.  +  =

4.  +  =

5.  +  =

6.  + 

**விண்மீன், கோலாட்டம், நீதிநூல், எழுதுகோல், மதிமுகம், முகமூடி**

## சுவைச்செய்தி

பன்னாட்டுச் சுழற்சங்கம், சமூக சேவையை நோக்கமாகக் கொண்டது. இது சமயம், நிறம், இனம், பால், அரசியல் சார்பற்ற அனைத்து மக்களுக்கும் பொதுவான ஓர் அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் உலகம் முழுவதும் 34,282 சங்கங்களும், 1.2 மில்லியன் உறுப்பினர்களும் உள்ளனர். பன்னாட்டுச் சுழற்சங்கத்தின் முதன்மைக் குறிக்கோள் "தன்னைவிட மேலானது சேவை" என்பதாகும். அதன் இரண்டாவது குறிக்கோள், "மிகச்சிறந்த இலாபம் என்பது சேவையே ஆகும்." என்பதாகும்.

ROTARY INTERNATIONAL

## 24.6 கேட்டல் கருத்தறிதல்

### உதவும் மனம் வேண்டும்



அமுதன் பிறருக்கு உதவி செய்வதில் வல்லவர். மிகவும் இரக்க குணம் கொண்டவர். ஒருநாள் அவர் வேலை தேடி நேர்முகத் தேர்வுக்காகச் சென்று கொண்டிருந்தார். அவர் சென்ற வழியில் மகிழுந்து (கார்) ஒன்று நின்று கொண்டிருந்தது. பெண்மணி ஒருத்தி, அதன் சக்கரத்தைக் கழற்ற முயற்சி செய்து கொண்டிருந்தாள். அந்த வழியாகச் சென்ற யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. ஆனால், அமுதன் ஓடிச்சென்று அவருக்கு உதவினார். "மிகவும் நன்றி!" என்று அந்தப் பெண்மணி கூறிவிட்டுச் சென்றாள். நேர்முகத் தேர்விற்கு நேரமாகிவிட்டதால், தனக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பே இல்லை என்று அமுதன் நினைத்தார். இருந்தாலும் நேர்முகத் தேர்விற்குச் சென்றார். அங்கு, அவர் யாருக்கு உதவி செய்தாரோ அந்தப் பெண் இருப்பதைப் பார்த்தார். அவர்தாம் அந்த நிறுவனத்தின் இயக்குநர் என்று அறிந்தார். அமுதனைப் பார்த்ததும், அப்பெண்மணி இருக்கையைவிட்டு எழுந்தாள். "பிறருக்கு உதவும் நல்ல உள்ளம் கொண்ட உங்களுக்கு இங்கே வேலை தருவதைப் பெருமையாகக் கருதுகிறேன்." என்று அவரைப் பாராட்டி வேலையும் அளித்தார்.

**வினாக்கள்**

1. அமுதன் எத்தகைய பண்பு கொண்டவர்?
2. காரின் சக்கரத்தைக் கழற்ற முயற்சி செய்து கொண்டிருந்தவர் யார்?
3. அமுதன் நேர்முகத் தேர்விற்குக் காலம்கடந்து செல்லக் காரணம் என்ன?
4. நிறுவனத்தின் இயக்குநருக்கு அமுதனை எப்படித் தெரியும்?
5. உரைப்பகுதியின் மூலம் நீங்கள் அறிந்துகொண்ட பண்புகள் யாவை?

## 24.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்









## 24.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(குறள் 298)
-திருவள்ளுவர்

(அகம் - மனம்; வாய்மை - உண்மை)

**பொருள்:**

உடல் தூய்மை, நீரால் உண்டாகும். அதுபோல, மனத்தூய்மை உண்மை பேசுவதால் உண்டாகும்.

## 24.9 அறிந்துகொள்வோம்

1. பேருந்து நிலையம் - Bus stand
2. ஊதல் - Whistle
3. ஓட்டுநர் - Driver
4. நடத்துநர் - Conductor
5. ஜன்னல் - Window

## 24.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் கருத்துக்கு விழிப்புணர்வுத் தொடர் உருவாக்குக.**

எ.கா.

மழைநீர் சேமிப்பு - மழைநீரைச் சேமிப்போம்! மண்ணுலகைக் காப்போம்!

1. கல்வியின் சிறப்பு
2. நட்பின் பெருமை
3. மனிதநேயம்
4. கடமையுணர்ச்சி
5. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

## 24.11 செயல்திட்டம்

உங்கள் பகுதியில் திடீரென விபத்து ஏற்பட்டால், நீங்கள் எவ்வாறு மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள் என்பதை வரைபடமாக வரைந்து வருக.

## மீள்பார்வை

### பயிற்சிகள்

**1) கீழ்க்காணும் தொடர்களில் வண்ணமிடப்பட்ட சொல்லுடன் பொருந்தும் வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக.**

**(ஆக, கு, ஐ, ஆல், உடன்)**

1. மாணவர்கள் திருக்குறள் படித்தனர்.
2. அவர் வண்ணஎழுதுகோல் படம் வரைந்தார்
3. கண்மணி தன் தோழிகள் பூங்காவிற்குச் சென்றாள்.
4. ராமு மழை விட்டபின் வீடு வந்தான்.
5. அன்பும் எழிலும் தேர்வுக்கு படித்தார்கள்.

**2) கீழ்க்காணும் உவமைத் தொடருக்கு ஏற்ற பொருளை இணைத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகமும் சதையும் போல் | - | தெளிவு |
| 2. | மழைகாணாப் பயிர்போல | - | இழப்பு |
| 3. | தாயைக்கண்ட சேயைப் போல | - | இணைபிரியாமை |
| 4. | உள்ளங்கை நெல்லிக்கனி போல | - | துன்பம் |
| 5. | அடியற்ற மரம்போல | - | மகிழ்ச்சி |

**3) இடம் மாறியுள்ள சொற்களை வரிசைப்படுத்திப் பழமொழியைக் கண்டறிக.**

1. வழி பிறந்தால் தை பிறக்கும்.
2. பொன் அல்ல மின்னுவது எல்லாம்.
3. காற்றுள்ள தூற்றிக்கொள் போதே.
4. அளவுக்கு நஞ்சு மிஞ்சினால் அமுதமும்.
5. நினை உள்ளளவும் உப்பிட்டவரை.

**4) கீழ்க்காணும் உரைப்பகுதியில் உள்ள இணைமொழிகளை வட்டமிடுக.**

தாத்தா தோட்டத்தில் வாடிவதங்கிய செடிகொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தார். அப்போது வருண் அருகே ஓடிஆடிக் கொண்டிருந்ததை கண்டார். உடனே, அவர் வருணை அழைத்து இந்தச் செடிகளை நாம் கண்ணும்

கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். ஆனால், வருண் "நாம் இதைப் பார்த்துக்கொள்வதால் என்ன பயன்?" என்று கேட்டான். அதற்குத் தாத்தா "இந்தச் செடிகள் அனைத்தும் மருத்துவ குணம் மிக்கவை. இவற்றை நாம் பாதுகாத்து வந்தால் நோய்நொடி இல்லாமல் வாழலாம்" என்று கூறினார். உடனே வருண், "கவலை கொள்ளாதீர்கள் தாத்தா இனி, இவற்றை நான் அல்லும்பகலும் கண்விழித்துப் பார்த்துக்கொள்கிறேன்" என்றான்.

## 5) பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | இன் | - | இரண்டாம் வேற்றுமை உருபு |
| 2. | அது | - | ஏழாம் வேற்றுமை உருபு |
| 3. | கண் | - | மூன்றாம் வேற்றுமை உருபு |
| 4. | ஆல் | - | ஐந்தாம் வேற்றுமை உருபு |
| 5. | ஐ | - | ஆறாம் வேற்றுமை உருபு |

## 6) கீழ்க்காணும் ஒரு சொல் குறிக்கும் பல பொருள் வரிசையில் பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1. அணி, நகை, நிலா, அழகு, வரிசை.
2. மெய், வாய்மை, உடல், மெய்யெழுத்து, சோலை.
3. ஏடு, வேடம், பூவிதழ், புத்தக ஏடு, பாலாடை.
4. மா, திங்கள், குதிரை, மாமரம், பெருமை.
5. திங்கள், மாதம், கிழமை, நிலா, மாடிப்படி.

## 7) கீழ்க்காணும் ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களில் விடுபட்ட ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(இராஜா, வேழம், மொழி, குழவி, ஊருணி)**

1. குழந்தை, சிசு, மழலை, பிள்ளை, ______________.
2. அரசன், மன்னன், வேந்தன், கோ, ______________.
3. யானை, களிறு, களபம், கரி, ______________.
4. கிணறு, கடல், குளம், குட்டை, ______________.
5. சொல், பேசு, விளம்பு, கூறு, ______________.

**8) சரியான மரபுதொடர் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(கைகொடுத்து, வாழையடி வாழையாக, அடிபணிந்து, மல்லுக்கட்டினர், உச்சிகுளிர்ந்தனர்)**

1. தன் மகனின் சாதனையை எண்ணிப் பெற்றோர்கள் ________________.
2. அண்ணனும் தம்பியும் ஒரே பொம்மைக்காக ________________.
3. கவிதா போட்டித் தேர்விற்குப் பணம் செலுத்த முடியாமல் தவித்த தன் தோழிக்கு ________________ உதவினாள்.
4. உன் குலம் ________________ தழைத்து வாழ வேண்டும் என்று முன்னோர்கள் வாழ்த்தினர்.
5. பெரும்பாலான முதலாளிகள் தம் ஊழியர்கள் தமக்கு ________________ இருக்க வேண்டும் என்றே கருதுகின்றனர்.

**9) பழமொழியையும் அவற்றைக் கூறிய நாட்டையும் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சிறுதுளி பெருவெள்ளம் | - | ஆப்பிரிக்கா |
| 2. செயலே பேசும் | - | சீனா |
| 3. சிறு ஓடத்திலும் ஓடக்காரனுக்கு இடமிருக்கும் | - | அரேபியா |
| 4. அன்பை விதைத்தவன் நன்றியை அனுபவிப்பான் | - | தமிழ்நாடு |
| 5. முதல் பட்டத்திற்குப் படிப்பதுதான் கடினம் அடுத்த பட்டம் தானாக வரும் | - | அமெரிக்கா |

**10) கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியா?/ தவறா? எனக் குறிப்பிடுக.**

1. மயில் அகவும். (சரி/ தவறு)
2. கோழி கூவும். (சரி/ தவறு)
3. குயில் கொக்கரிக்கும். (சரி/ தவறு)
4. ஆந்தை அலறும். (சரி/ தவறு)
5. காகம் கரையும். (சரி/ தவறு)

**11) கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. Guest | - | தூண்டுதல் |
| 2. Hospitality | - | கண்டுபிடிப்பு |
| 3. Pottery | - | விருந்தினர் |
| 4. Stimulation | - | மண்பாண்டம் |
| 5. Invention | - | விருந்தோம்பல் |

## 12) பின்வரும் திருக்குறள்களில் விடுபட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(சொல்லிற், நன்று, உள்ளாறும், அனைத்தறன், சாகாடும்)**

1. பீலிபெய் ________________ அச்சிறும் அப்பண்டம்
   சால மிகுத்துப் பெயின்.

2. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
   ________________ பயனிலாச் சொல்.

3. மனத்துக்கண் மாசிலன் ஆதல் ________________
   ஆகுல நீர பிற.

4. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   அன்றே மறப்பது ________________.

5. தீயினாற் சுட்டபுண் ________________ ஆறாதே
   நாவினாற் சுட்ட வடு.

## 13) பின்வரும் படத்தைப் பார்த்து மூன்று தொடர் உருவாக்குக.



1. ________________________________________

2. ________________________________________

3. ________________________________________

**14) பின்வரும் தொடர்களிலுள்ள வேற்றுமை உருபு மற்றும் சொல்லுருபை எடுத்து எழுதுக.**

1. மாதவன் பள்ளியிலிருந்து நூலகத்திற்குச் சென்றான்.
2. மரத்தினின்று பழங்கள் விழுந்தன.
3. பானுவினுடைய அப்பா சிறந்த ஆசிரியர்.
4. வீட்டின் பின் அழகிய பூச்செடிகள் உள்ளன.
5. புற்றின்கண் பாம்பைக் கண்டேன்.

**15) கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை இணைத்து உவமைத் தொடர்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
|  |  | |
|  |  | |
|  |  | |
|  |  | |
|  |  | |

## 25.1 பேசுவோம்

பாடம்
25



### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட உணவுப்பொருள்களைப் பற்றி உங்கள் வகுப்பில் குழுவினரோடு கலந்துரையாடுக.

## 25.2 படிப்போம்

# உடல்நலம் காக்கும் உணவுகள்




உலக உணவு நாள் ஆண்டுதோறும் அக்டோபர் 16ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. அதுபற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கண்காட்சி நடைபெறுகிறது. குமரன் தன் அம்மாவுடன் அந்தக் கண்காட்சிக்குச் செல்கிறான். அங்கிருக்கும் காய்கனிகள் குமரனிடம் பேசத் தொடங்குகின்றன.


கேரட்

குமரா! எங்கே பார்க்கிறாய்? வியப்பாக இருக்கிறதா? நான்தான் கேரட் பேசுகிறேன். என்னைப் பற்றி நீ தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? சொல்கிறேன் கேள். என்னிடம் உயிர்ச்சத்து 'ஏ' உயிர்ச்சத்து 'சி' அதிகமாகவே இருக்கின்றன. கண்கள் மற்றும் இதயத்தின் நலன் காப்பது என் முதன்மைப் பணி. என்னை நாள்தோறும் உணவில் சேர்த்துக்கொண்டால் கண் மருத்துவரே தேவையில்லை. அது மட்டுமா, உன் மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பேன்.



வாழைப்பழம்

வா, வா, குமரா! என்னைப் பார்க்காமல் சென்று விடுவாய் என நினைத்தேன். நான்தான் வாழைப்பழம். நான் மிகவும் மிருதுவாக இருப்பேன். ஆண்டு முழுவதும் கிடைப்பேன். என்னிடம் பொட்டாசியம், உயிர்ச்சத்து ஏ, பி, பி2, சி ஆகியவை நிறைந்துள்ளன. மூளையின் செயலினை அதிகரிப்பதே என் வேலை. இரைப்பையிலும் குடலிலுமுள்ள உணவுக் கழிவுகளை வெளியேற்றும் மருத்துவர் நானே!



மாம்பழம்

குமரா என்னருகில் வா.. நான்தான் மாம்பழம் பேசுகிறேன். முக்கனியுள் முதன்மையான பழம் நானே! என்னுள் நார்ச்சத்து அதிகம் உள்ளது. உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பைக் குறைத்து உடல்நலம் காப்பேன். உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பேன். இரும்புச்சத்து குறைபாடு உள்ளவர்கள் என்னை எடுத்துக் கொண்டால் நலம் பெறலாம்.



வெண்டைக்காய்

நான்தான் வெண்டைக்காய். மனிதர்களின் மூளை சுறுசுறுப்பாக இருக்க நான் பயன்படுகிறேன். குழந்தைகள் கல்வியிலும் நினைவாற்றலிலும் சிறந்து விளங்க உணவில் என்னை அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் போதும். மேலும் இதயம் மற்றும் கல்லீரல் ஆரோக்கியத்திற்கும் நான் நலம் புரிகிறேன்.



நெல்லிக்காய்

என்னை மட்டும் பார்க்காமல் போகிறாயே! குமரா! முதுமை வராமல் தடுக்கும் தனிச்சிறப்பு எனக்கு உண்டு. என்னிடம் அதிக அளவில் உயிர்ச்சத்து 'சி' உள்ளது. ஒரு நெல்லிக்காய் மூன்று ஆப்பிளுக்குச் சமம் என்று சொல்கிறார்கள். என்னுள் பல மருத்துவக் குணங்கள் உண்டு.



அவரைக்காய்

குமரா, உன் பார்வையை என் பக்கம் திருப்பு. கண்ணாடி அணிவதைத் தடுக்கும் ஆற்றல் எனக்கு உண்டு. கொழுப்பைக் குறைக்கும் திறன் இருப்பதால், இரத்த அழுத்தம், இதயநோய் உள்ளவர்கள் என்னை உணவாக எடுத்துக் கொள்ளலாம். நான் இரத்தத்தையும் தூய்மை செய்வேன். என்னிடம் சுண்ணாம்புச் சத்து இருப்பதால், பற்களையும் எலும்புகளையும் உறுதியாக்குவேன்.



பச்சைப்பயிறு

உடல்நலம் காக்கும் பயறு வகைகளில் நானே முதலிடத்தில் உள்ளேன். என்னுள் பொட்டாசியம், மக்னீசியம், தாமிரம், இரும்புச்சத்துகள் நிறைந்துள்ளன. என்னை முளைகட்டிச் சாப்பிட்டு வந்தால் முழுப்பயனும் கிடைக்கும். நினைவாற்றல் அதிகரிக்கவும், வயிற்றுச்சிக்கலைச் சரி செய்யவும், இரத்த அழுத்தத்தைச் சரி செய்யவும் சர்க்கரை நோயைக் குணப்படுத்தவும் நான் உதவுகிறேன்.

குமரா! குமரா! அம்மாவின் குரல் கேட்டுத் திரும்பினான் குமரன். காய்கனிகள் பேசியவற்றை அம்மாவிடம் கூறினான். உடல்நலம் காக்கும் உணவுகளைத் தான் அறிந்து கொண்டதோடு, தன் நண்பர்களுக்கும் எடுத்துக் கூறுவேன் என்றான். அவன் கூறியதைக் கேட்டு, அம்மா மிகவும் பாராட்டினார்.

## பொருள் அறிவோம்

1. பணி - வேலை
2. சக்தி - ஆற்றல்
3. முக்கனி - மா, பலா, வாழை

## பயிற்சிகள்

### (அ) விடை காண்போம்

1. குமரன் எங்குச் சென்றான்?
2. கேரட், தன்னைப் பற்றி என்ன கூறியது?
3. முக்கனியுள் முதன்மையானது எது? அதன் பயன் என்ன?

### (ஆ) சரியானதைத் தேர்வு செய்க.

1. உலக உணவு நாள்

| | |
|---|---|
| நவம்பர் 14 | அக்டோபர் 16 |

2. பச்சை வண்ணத்தில் இருக்கும் உணவுப் பொருள்

| | |
|---|---|
| வெண்டைக்காய் | பீட்ரூட் |

3. குடல் கழிவுகளை வெளியேற்ற உதவும் பழம்

| | |
|---|---|
| வாழைப்பழம் | கொய்யாப்பழம் |

4. முக்கனியுள் ஒன்று

| | |
|---|---|
| பப்பாளி | மாம்பழம் |

5. மூன்று ஆப்பிளுக்குச் சமம் என்று கூறப்படும் உணவுப்பொருள்

| | |
|---|---|
| அவரைக்காய் | நெல்லிக்காய் |

### (இ) பொருத்துக.

1. கேரட் - எலும்பு உறுதி
2. வெண்டைக்காய் - கண் பார்வை
3. மாம்பழம் - நினைவாற்றல்
4. அவரைக்காய் - நார்ச்சத்து

## 25.3 பாடிமகிழ்வோம்

### உழவுப்பாடல் – களை பறித்தல்

ஆத்துக்குள்ளே ஏலே லோ
அத்திமரம் அகி லகிலா
அத்திமரம்
அளவு பாத்து ஜலப்பிடி
அறுக்கித் தள்ளு அகி லகிலா
அறுக்கித் தள்ளு
குளத்துக் குள்ளே ஏலே லோ
கொய்யாமரம் அகி லகிலா
கொத்தித் தள்ளு
நாத்துக்குள்ளே ஏலே லோ
நச்சுப் புல்லு அகி லகிலா
நச்சுப்புல்லு
நச்சுப்புல்லை ஜலப்பிடி
நறுக்கித் தள்ளு அகி லகிலா
நறுக்கித் தள்ளு

– நாட்டுப்புறப் பாடல்



## 25.4 தெரிந்துகொள்வோம்

### இரட்டைக்கிளவி

"இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை..."

– கவிஞர் சுரதா



குழந்தை கலகல எனச் சிரித்தது.



மரம் மடமட என முறிந்தது.



ஓடையில் நீர் சலசல என ஓடியது



வைர மோதிரம் பளபள என மின்னியது.

இரட்டைக்கிளவி என்பது, ஒரே சொல் இரண்டு முறை சேர்ந்து வரும். இவற்றைப் பிரிக்க முடியாது, பிரித்தால் பொருள் தராது. ஒலிக்குறிப்புகளாகவே சேர்ந்து வரும்.

### இரட்டைக்கிளவி

| | | | |
|---|---|---|---|
| கடகட | கணகண | கருகரு | கமகம |
| கிடுகிடு | கிறுகிறு | கீச்கீச் | குளுகுளு |
| சடசட | சரசர | சிடுசிடு | தடதட |
| நறநற | படபட | பரபர | பொலபொல |
| மடமட | மளமள | வளவள | வெளுவெளு |

## அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு முறையும் அதற்கு மேலும் அடுக்கி வந்தால் அதனை அடுக்குத்தொடர் என்போம். சொல்லைப் பிரித்தால் பொருள் தரும் துல்லியமாகச் சொல்லவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் இவை அடுக்கி வரும்.



காட்டில் மான்கள் துள்ளித்துள்ளி ஓடின.



அம்மா வாழை இலையில் சுடச்சுட உணவு பரிமாறினாள்.



பறவைகள் கூட்டம்கூட்டமாய்ப் பறந்தன.



பூங்காவில் வண்ணவண்ணப் பூக்கள் பூத்திருந்தன.



மரத்தில் தொங்கிய குரங்குகளைக் கண்ட சிறுவர்கள் குரங்கு! குரங்கு! என்று கத்தினர்.

## பயிற்சிகள்

**அ) தொடருக்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**(கமகம, கருகரு, தகதக, பிசுபிசு, கலகல)**

1. முல்லை ____________ எனச் சிரித்தாள்



2. வைர மோதிரம் ____________ என மின்னியது



3. நெய் வாசம் ____________ என மணம் வீசியது



4. வெண்டைக்காயை அறிந்து வைத்ததால் ____________ என இருந்தது.



5. தலைமுடி ____________ என இருந்தது.



**ஆ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான அடுக்குத்தொடரை எடுத்து எழுதுக.**

**(குலைகுலையாய்க், விட்டுவிட்டுப், சீப்புச்சீப்பாய், கட்டுக்கட்டாய், வரிசைவரிசையாய்)**

1. கீரைகள் ____________ வைக்கப்பட்டு இருந்தன.



2. மழை ____________ பெய்தது.



3. வாழைக்காய் ____________________ இருந்தது.



4. போர் வீரர்கள் ____________________ சென்றனர்.



5. திராட்சை ____________________ காய்த்திருந்தது.



## 25.5 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைக் கொண்டு, உணவுப் பொருள்களைக் கண்டுபிடிக்க.

1. முட்டையின் பெயரில் தொடங்கும் உணவுப் பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ட் | டை | க் | | ஸ் |

2. சிவப்பு நிறத்தில் இருக்கும் பழம்

| | | | |
|---|---|---|---|
| | க் | | ளி |

3. உரிக்கும் போது கண்களில் கண்ணீர் வர வைப்பது.

| | | | | |
|---|---|---|---|---|
| வெ | | கா | ய | |

4. நெய் இந்தப் பொருளிலிருந்து கிடைக்கிறது.

| | |
|---|---|
| பா | |

5. அதிக நீர்ச்சத்து நிறைந்த பழம்.

| | | | | |
|---|---|---|---|---|
| த | | பூ | | ணி |

## சுவைச்செய்தி



'ஏழைகளின் பாதாம்' என்று அழைக்கப்படுவது நிலக்கடலை. இந்நிலக்கடலையைக் காந்தியடிகள் விரும்பி உண்டார். இதன் விலை குறைவு. சாதாரண மக்களும் வாங்கி உண்ணலாம். இது சத்துகள் நிறைந்த உணவு வகைகளுள் ஒன்று. நிலக்கடலையில் அதிக அளவு புரதம் இருப்பதால், காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் அதனை உணவாக எடுத்துக் கொண்டார்.



## 25.6 கேட்டல் கருத்தறிதல்

### திட மற்றும் திரவ உணவுகள்



நமது உடலை வளர்க்க உதவுவது உணவு. வாய்வழியாக உட்கொண்டு, உயிர் வாழத் துணையாக நிற்கும் பொருளையே உணவு என்கிறோம். உணவு உடலுக்கு ஆற்றலைத் தருகின்றது. உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. உறுப்புகள் தேய்ந்து அழிந்துவிடாமல் பாதுகாக்கிறது. உடல் நோய்க்கு மருந்தாகவும் பயன்படுகிறது. நாம் இருவகை உணவுகளை உண்கிறோம். ஒன்று, திட உணவு. மற்றொன்று, திரவ உணவு. காய்கள், பழங்கள், இறைச்சி, மீன் போன்றவை திட உணவுகள். இளநீர், தேன், பால் போன்றவை திரவ உணவுகள்.

**வினாக்கள்**

1. நமது உடலை வளர்க்க உதவுவது எது?
2. உணவு என்று எதனைக் கூறுகிறோம்?
3. உணவு உண்பதால் விளையும் பயன்கள் யாவை?
4. திட உணவுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
5. திரவ உணவுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## 25.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 25.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

(குறள் 322)
-திருவள்ளுவர்

(பகுத்துண்டு – பகிர்ந்து உண்டு, பல்லுயிர் – பல உயிர், ஓம்புதல் – காப்பாற்றுதல்)

**பொருள்:**

தம்மிடம் இருக்கும் உணவைப் பகிர்ந்து கொடுத்து, எல்லா உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் முதன்மையான அறமாகும்.

## 25.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உடல்நலம் | - | Health |
| 2. | உணவு | - | Food |
| 3. | விழிப்புணர்வு | - | Awareness |
| 4. | உயிர்ச்சத்து | - | Vitamin |
| 5. | இரத்த அழுத்தம் | - | Blood Pressure |
| 6. | சர்க்கரை நோய் | - | Diabetes |
| 7. | கொழுப்பு | - | Fat |
| 8. | நார்ச்சத்து | - | Fibre |
| 9. | நோய் எதிர்ப்புச் சக்தி | - | Immunity |
| 10. | நெல்லிக்காய் | - | Gooseberry |

## 25.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**ஒவ்வொரு வரியின் இறுதியிலும் அழகு என முடியும்படி, மூன்று சொல் கொண்ட தொடர் உருவாக்குக.**

கடலுக்கு அலை அழகு

கவிதைக்குப் பொருள் அழகு

மழலைக்குச் சிரிப்பு அழகு

________________________________

________________________________

________________________________

________________________________

## 25.11 செயல்திட்டம்

உங்கள் பகுதியில் கிடைக்கும் உணவுப் பொருள்களைக் கண்டறிந்து, அவற்றிலுள்ள மருத்துவக் குணங்களை அட்டவணைப்படுத்துக.

## பாடம் 26

### 26.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படச்சூழல் குறித்து, என்ன நினைக்கிறீர்கள்? வகுப்பில் கலந்துரையாடுக.

## 26.2 படிப்போம்

# நல்ல பழக்கவழக்கங்கள்



(ஆசிரியர் வகுப்பில் நுழைகிறார். மாணவர்கள் எழுந்து வணக்கம் செலுத்த, ஆசிரியரும் வணக்கம் செலுத்துகிறார்.)

**ஆசிரியர்** : அன்புக் குழந்தைகளே! இன்று நாம் மிகவும் தேவையான ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ளப்போகிறோம்.

**கவின்** : நாங்கள் கேட்பதற்கு ஆவலாக உள்ளோம்.

**ஆசிரியர்** : சொல்கிறேன். அதற்கு முன்னால் நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்பேன். பதில் சொல்கிறீர்களா?

**வனிதா** : ஓ! சொல்வோமே.

**ஆசிரியர்** : நம் கண்களில் எதிர்பாராமல் தூசி விழுந்தால் என்ன செய்ய வேண்டும்?

**நவீன்** : நான் சொல்கிறேன். கண்ணைத் தேய்க்கவேண்டும். அப்போதுதான் தூசி வெளியே வரும்.

**ஆசிரியர்** : தவறு, நவீன். அப்படிச் செய்யக்கூடாது. ஒரு கையில் தண்ணீரை அள்ளித் தூசி விழுந்த கண்களை கழுவி தூய்மை செய்யவேண்டும். சரி. நம் காதுகளையும் மூக்கையும் எப்படித் தூய்மை செய்யவேண்டும்?

| | | |
|---|---|---|
| **விஷால்** | : | கூர்மையான பொருள்களைக்கொண்டு தூய்மை செய்யக்கூடாது என்று என் அம்மா சொல்லியிருக்கிறார். |
| **ஆசிரியர்** | : | சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். அதுசரி, நீங்கள் ஒருநாளைக்கு எத்தனை முறை பல் துலக்குவீர்கள்? |
| **கண்ணன்** | : | நான் இரண்டுமுறை பல் துலக்குவேன். |
| **மாதவி** | : | நான் உணவு சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் பல் துலக்குவேன். |
| **ஆசிரியர்** | : | நன்றாகத் தெரிந்து வைத்துள்ளீர்கள். ஆனால், சாப்பிட்ட பின்பு வாய் கொப்பளிப்பீர்களா? |
| **மணி** | : | எங்கள் அப்பா ஒவ்வொரு முறையும் செய்யச் சொல்வார். நானும் வாய் கொப்பளிப்பேன். |
| **ஆசிரியர்** | : | நல்லது. பள்ளி முடிந்ததும் எத்தனை பேர் விளையாடச் செல்வீர்கள்? ஓ, எல்லாருமே விளையாடுவீர்களா? விளையாடி முடித்தபின் என்ன செய்வீர்கள்? |
| **நவீன்** | : | நான் வீட்டுப்பாடம் செய்வேன். |
| **வேலு** | : | என் அம்மா சிற்றுண்டி தருவார். நான் சாப்பிடுவேன். |
| **ஆசிரியர்** | : | சரி, சரி. ஆனால் விளையாடி முடித்து வீட்டுக்கு வந்தவுடன் எத்தனை பேர் கைகால்களைச் சுத்தம் செய்வீர்கள்? அட, யாரும் கை தூக்கவில்லையே? |
| **ஆனந்தி** | : | ஏன் சுத்தம் செய்ய வேண்டும் ? |
| **ஆசிரியர்** | : | நாம் விளையாடும்போது அழுக்குகள் நம் கைகளிலும் கால்களிலும் படிகின்றன. நகங்களில் அழுக்கு சேர்கிறது. அதே அழுக்குக் கையுடன் உணவு சாப்பிட்டால், நம் வயிற்றுக்குத்தான் கெடுதல். வேறென்ன? நம்மைத்தேடி அழையா விருந்தாளியாக நோய் வரும். |
| **மணி** | : | இனிமேல் கைகால்களைக் கழுவிவிட்டு மற்ற வேலைகளைச் செய்கிறோம். |
| **ஆசிரியர்** | : | இதுவரை உடல் தூய்மைபற்றிப் பேசினீர்கள். அதுபோல, நம் உள்ளத்தையும் தூய்மையாக வைக்கவேண்டும் அல்லவா? |

**வனிதா** : அது எப்படி என்று சொல்லுங்கள்.

**ஆசிரியர்** : பொறாமை, கோபம், புறம் பேசுதல் போன்ற தீய எண்ணங்களை அகற்ற வேண்டும். அன்பு, அடக்கம், வாய்மை பேசுதல், பெரியோரை மதித்தல் ஆகிய நல்ல பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். புரிந்து கொண்டீர்களா?

**மாணவர்கள்** : நன்றாகப் புரிந்துகொண்டோம். இனி, உடலை மட்டுமின்றி, உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வோம்.

**ஆசிரியர்** : "உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்" எனக் கவிமணி தேசிக விநாயகனார் பாடியதை மறக்காமல் நினைவில் கொள்வோம்.

## பொருள் அறிவோம்

1. தூசி - அழுக்கு
2. சுத்தம் - தூய்மை
3. பொறாமை - பிறரிடம் உள்ளது தன்னிடம் இல்லை என்பதை பொறுத்துக் கொள்ளாமை
4. கோபம் - சினம்
5. புறம் பேசுதல் - ஒருவரைப் பற்றி இல்லாததைச் சொல்லுதல்

## பயிற்சி

### விடை காண்போம்

1. ஆசிரியர், மாணவர்களுடன் எதனைப் பற்றிக் கலந்துரையாடினார்?
2. கண்களில் தூசி விழுந்தால், எப்படித் தூய்மை செய்ய வேண்டும்?
3. விளையாடிவிட்டு வந்தபின், ஏன் கைகாலைத் தூய்மை செய்ய வேண்டும்?
4. உளநலத்திற்குத் தேவையான பண்புகள் யாவை?
5. உளநலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பண்புகள் யாவை?

## 26.3 பாடிமகிழ்வோம்

### பாடு பாப்பா

பள்ளி செல்லும் பாப்பா
பாடம் நன்றாய்ப் படிப்பாள்
வெள்ளை ஆடை உடுப்பாள்
விரைந்து நேராய் நடப்பாள்!

நல்ல நல்ல வழக்கம்
நாளுங் கற்று வருவாள்
மெல்ல மெல்லப் பெரிய
மேதை யாகி விடுவாள்!

கற்ற பெண்கள் நாட்டின்
கண்கள் என்று சொல்வார்
சுற்றம் போலே மக்கள்
சூழ்ந்து போற்றி நிற்பார்!

- நாரா நாச்சியப்பன்



## 26.4 தெரிந்து கொள்வோம்

### எண்ணுப்பெயர்கள்

எண்ணிக்கையைக் குறிப்பதற்குப் பயன்படும் பெயர்ச்சொற்கள் எண்ணுப் பெயர்கள் எனப்படுகின்றன. இப்பாடத்தில் 100 முதல் 1000 வரையுள்ள எண்ணுப்பெயர்களைப் படிப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நூறு | – | 100 |
| 2. | இருநூறு | – | 200 |
| 3. | முந்நூறு | – | 300 |
| 4. | நானூறு | – | 400 |
| 5. | ஐந்நூறு | – | 500 |
| 6. | அறுநூறு | – | 600 |
| 7. | எழுநூறு | – | 700 |
| 8. | எண்ணூறு | – | 800 |
| 9. | தொள்ளாயிரம் | – | 900 |
| 10. | ஆயிரம் | – | 1000 |

கூடையில் நூறு மாம்பழங்கள் இருந்தன.



இந்த வாழைத்தாரில் இருநூறு பழங்கள் உள்ளன.



இந்த ஓவியம் முந்நூறு ஆண்டுகள் பழைமையானது.



பாரதியார் கவிதைத் தொகுப்பு நானூறு பக்கங்கள் கொண்டது.




புத்தகக் கண்காட்சியில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன.



இந்த நிறுவனத்தில் அறுநூறு நபர்கள் பணிபுரிகின்றனர்.



இராமு எழுநூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டான்.



அந்தச் சிலையின் உயரம் எண்ணூறு அடி ஆகும்.



போட்டித் தேர்வைத் தொள்ளாயிரம் மாணவர்கள் எழுதுகின்றனர்.



அரசர் ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கினார்.



## பயிற்சிகள்

### அ) எண்ணையும் பெயரையும் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | 100 | எண்ணூறு |
| 2. | 300 | நூறு |
| 3. | 900 | எழுநூறு |
| 4. | 700 | முந்நூறு |
| 5. | 800 | தொள்ளாயிரம் |

### ஆ) கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்தி எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடிக்கவும்.

1. வாழைத்தாரில் ____________________ பழங்கள் இருந்தது. | ரு | இ | று | நூ |
2. விமானம் ____________________ அடி உயரத்தில் பறந்தது | ம் | ர | யி | ஆ |
3. யானை ____________________ கிலோ எடை இருந்தது. | று | நூ | று | அ |
4. ஐங்குறுநூற்றில் ____________________ பாடல்கள் உள்ளன. | ந் | ஐ | று | நூ |
5. நீதிநூல்களுள் ஒன்று பழமொழி ____________________ | னூ | நா | று |

## 26.5 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்தும் கீழே தரப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டும் கட்டங்களில் மறைந்திருக்கும் சொற்களைக் கண்டறிக.**

1. 'திரு' என்று தொடங்கும் அறநூல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | ரு | க் | கு | ற | ள் |

2. மரத்திற்கு மரம் தாவும் விலங்கு

| | | | |
|---|---|---|---|
| | | | |

3. கடலில் பயணம் செய்ய உதவுவது

| | | | |
|---|---|---|---|
| | | | |

4. மழையுடன் வேகமாக காற்று வீசும்

| | | |
|---|---|---|
| | | |

5. தோகை விரித்து ஆடும் பறவை

| | | |
|---|---|---|
| | | |

6. பூட்டைத் திறப்பது

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

7. தமிழ் மாதங்களில் ஒன்று

| | | | |
|---|---|---|---|
| | | | |

8. கூவும் பறவை

| | | |
|---|---|---|
| | | |

9. பாம்பென்றால்____யும் நடுங்கும்.

| | |
|---|---|
| | |

10. காற்று மாசுபடுதலுக்கு காரணம்.

| | |
|---|---|
| | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ல் | கோ | வு | ற | தி |
| ஜ | ப | பு | ய | ல் | ரு |
| ம | ப் | டை | கை | பு | க் |
| யி | க | ப | ல் | யி | கு |
| ல் | சி | த் | தி | ரை | ற |
| கு | ர | ங் | கு | ங் | ள் |

## சுவைச்செய்தி

**புவி மணி**




புவி மணி (Earth Hour) என்பது வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும் உள்ள மின் விளக்குகளையும், தேவை இல்லாத மின் கருவிகளையும் இரவு 8:30 மணியிலிருந்து 9:30 வரை ஒரு மணி நேரம் நிறுத்தி வைக்கும் ஒரு நிகழ்வாகும். 2007 முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை 'புவி மணி' (Earth Hour) பல நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம், புவிவெப்பமயமாதல் உள்ளிட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கம். இது உலக இயற்கை நிதியத்தின் முன்னெடுப்பாகும்.

## கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்




**வினாக்கள்**

1. உலகச் சுற்றுச்சூழல் தினம் என்று கடைப்பிடிக்கப்படுகிறது?
2. சுற்றுச்சூழல் காப்போம் என வேண்டுகோள் விடுப்பவர் யார்?
3. சுற்றுச்சூழல் காக்க விளம்பரத்தில் கூறப்படும் வாசகம் என்ன?

## 26.6 கேட்டல் கருத்தறிதல்

### பிளாஸ்டிக் கழிவுகள்



நெகிழிப் (பிளாஸ்டிக்) பயன்பாடு மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இன்றைய சூழலில் பிளாஸ்டிக் பைகளை அதிக அளவில் பயன்படுத்துவதால் அவை வீதிகளிலும் நிலங்களிலும் நீர்நிலைகளிலும் சேர்ந்து சுற்றுப்புறத்தைப் பெரிதும் பாதிப்படையச் செய்கின்றன. பிளாஸ்டிக் ஐரோப்பா அமைப்பின் (Organization of Plastics Europe) கூற்றுப்படி 1950 இலிருந்து 2017 வரை உற்பத்தி செய்யப்பட்ட 9.2 பில்லியன் டன் பிளாஸ்டிக் பொருள்களில் 7 பில்லியன் டன் கழிவுகளாக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் 14 மில்லியன் மெட்ரிக் டன் மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் கடலின் தரையில் தங்கியிருப்பதாக மதிப்பிட்டுள்ளனர். இந்த மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஊட்டச்சத்து இல்லாததாகவும் ஜீரணிக்க முடியாததாகவும் உள்ளன. மேலும் பிளாஸ்டிக் கழிவுகள் அவற்றின் அளவைவிட மில்லியன் மடங்கு மாசுகளை உருவாக்குகின்றன. இதனால் கடல்வாழ் உயிரினங்களின் உணவு, வாழிடம் ஆகியவை கேள்விக்குள்ளாகின்றன. இவ்வாறு பெருகும் மாசினைக் கட்டுப்படுத்த ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Environment Programme) என்ற அமைப்பு உலகளாவிய கட்டுப்பாட்டினை உருவாக்கிச் செயல்திட்டங்களை வகுத்து வருகின்றது. பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்த்துச் சுற்றுப்புறத்தையும் இயற்கைச் சூழலையும் பாதுகாப்பது மனிதர்களின் முதன்மையான கடமையாகும்.

### வினாக்கள்

1. மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று எது?
2. 1950 – 2017 வரையிலான ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கின் கழிவு எவ்வளவு?
3. கடலில் காணப்படும் மைக்ரோபிளாஸ்டிக் அளவு எவ்வளவு ?
4. மனிதர்களின் முதன்மையான கடமை எது?
5. நெகிழிப் பயன்பாட்டுக்கு மாற்றாக நாம் வேறு எவற்றைப் பயன்படுத்தலாம்?

## 26.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 26.8 செந்தமிழ்ச்செல்வம்

**சிறுபஞ்சமூலம்**

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் – பண்வனப்புக்
கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான் நன்றென்றல் வனப்பு

(பாடல்.8)

-காரியாசான்

(வனப்பு - அழகு; கண்ணோட்டம் – இரக்கம்; பண்- பாடல்)

**பொருள்:**

கண்ணுக்கு அழகு, இரக்கம் காட்டுதல். காலுக்கு அழகு, மதியாதவரைத் தேடிச் செல்லாமல் இருத்தல். எண்ணுக்கு அழகு இத்தனை என்று சரியாகக் கணக்கிட்டுக் கூறுதல். பாடலுக்கு அழகு, அதனைக் கேட்பவர்கள் மிகவும் நன்று எனப் பாராட்டுதல். அரசனுக்கு அழகு, தன் நாட்டு மக்களைத் துன்புறுத்தாதவன் என்று அனைவராலும் சொல்லப்படுதல்.

## 26.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தூய்மை | - | Purity/Cleanliness |
| 2. | காலை | - | Morning |
| 3. | மாலை | - | Evening |
| 4. | உறுப்பு | - | Organ |
| 5. | நகம் | - | Nail |
| 6. | அடக்கம் | - | Modesty |
| 7. | வாய்மை | - | Veraciousness |
| 8. | பொறாமை | - | Jealousy |
| 9. | சினம் | - | Anger |
| 10. | புறம்பேசுதல் | - | Gossiping |
| 11. | பெரியோரை மதித்தல் | - | Respecting the elders |
| 12. | ஐம்புலன் | - | Five senses |
| 13. | தீயஎண்ணம் | - | Malice |
| 14. | நற்பண்பு | - | Virtue |

## 26.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**நுண்கதையைப் படித்துப் பொருத்தமான தலைப்பு இடுக.**

பசுமை நிறைந்த கிராமம் ஒன்று இருந்தது. அந்தக் கிராமத்தின் நடுவில் அழகான ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றில் மீன்கள், ஆமைகள், தவளைகள் போன்ற உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருந்தன. ஆற்றிற்கு வரும் கொக்குகளும் மீன்களை உண்டு உயிர் வாழ்ந்துவந்தன. நீர்வளமும் நிலவளமும் அதிகம் இருந்ததால் அங்கு ஒரு தொழிற்சாலை கட்டப்பட்டது. அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் நச்சுத்தன்மை கொண்ட கழிவுநீர் அனைத்தும் அந்த ஆற்றிலேயே திறந்துவிடப்பட்டது. இதனால் ஆற்றில் உள்ள நீர் முழுதும் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சாக மாறியது. ஆற்றில் இருந்த உயிரினங்கள் எல்லாம் செத்து மிதந்தன. மீன்களை உண்டு வாழ்ந்த கொக்குகளும் சில நாள்களில் இறந்து போயின. ஆற்றங்கரை ஓரம் இருந்த தாவரங்கள் எல்லாம் கருகிவிட்டன. கொஞ்ச நாளில் ஆறு துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. கிராமமே பசுமை இழந்து பாலைவனமாக மாறியது. இறுதியில் அழகான ஆறும் தூய்மை இழந்து மாசடைந்தது.

## 26.11 செயல்திட்டம்

பிளாஸ்டிக் (நெகிழி) இல்லாத எதிர்காலம்பற்றி ஓவியம் வரைக.

27.1 பேசுவோம்

பாடம்
27



## கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படத்தைக் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

## 27.2 படிப்போம்

### கல்விக்கண் திறந்த காமராசர்



பள்ளி ஆண்டுவிழா. ஆசிரியர்களும் மாணவர்களும் விழாத்தலைவரை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது குறித்த நேரத்தில் வந்தார் தலைவர். கொடி ஏற்றியபின், மாணவர்களிடம் உரையாடினார். "படிப்பறிவு இருந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும். எனவேதான், நாடு முழுவதும் ஐம்பதாயிரம் பள்ளிகளைத் திறக்க முடிவு பண்ணியிருக்கோம். குழந்தைங்க நீங்க, எவ்வளவு தூரம் நடந்து போவீங்க? நீண்ட தூரம் நடந்தா களைச்சுப் போயிடுவீங்க, அப்புறம் எப்படிப் படிக்க முடியும்? அதனால ஒரு மைல் தூரத்தில ஆரம்பப்பள்ளி, மூன்று மைல் தூரத்தில நடுநிலைப்பள்ளி, ஐந்து மைல் தூரத்தில உயர்நிலைப்பள்ளி இருக்கணும்னு திட்டம்" என்றார். அவ்வாறு மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை காட்டிய அந்தத் தலைவரின் பெயர் காமராசர். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அவரைக் 'கர்மவீரர் காமராசர்' என அனைவரும் பாராட்டினர்.

காமராசர் கல்வியின் தேவையை நன்கு அறிந்திருந்தார். அதனால் இலவச மதிய உணவு, இலவசக் கல்வி, சீருடை எனப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தினார். மூடிக்கிடந்த பள்ளிகளைத் திறந்தார். புதிய பள்ளிகளை ஏற்படுத்தினார். அவருடைய அருஞ்செயலைக் கண்டு, மக்கள் வியந்தனர். அவரைக் 'கல்விக்கண் திறந்த காமராசர்' என அன்போடு அழைத்து மகிழ்ந்தனர்.

மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கும் உதவினார். பொறியியல், பொது மருத்துவம், கால்நடை மருத்துவம் சார்ந்து கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடங்கினார். மாணவர்கள் தம் அறிவை விரிவுசெய்யும் வகையில் பல கிளைநூலகங்களைத் தமிழ்நாட்டில் அமைத்தார். அவருடைய செயல்கள் கல்விப்புரட்சிக்குச் சிறந்த அடித்தளமாக விளங்கின.

காமராசர் தன்னலம் கருதாது பிறர்நலம் கருதினார். முதலமைச்சராய் இருந்தபோதும் எளிமையாக வாழ்ந்தார். கதராடையை விரும்பி அணிந்தார். தமக்கெனச் சொந்தவீடு இல்லாமல், வாடகை வீட்டிலேயே குடியிருந்தார்.

தமிழ்நாடு அரசு, காமராசரைப் பெருமைப்படுத்தும் வகையில், மதுரையிலுள்ள பல்கலைக்கழகத்திற்குக் 'காமராசர் பல்கலைக்கழகம்' எனப் பெயர் சூட்டியுள்ளது. 1976ஆம் ஆண்டு அவருக்கு இந்தியாவின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா விருது' வழங்கப்பட்டுள்ளது. அவருடைய பிறந்தநாளான ஜூலை 15ஆம் நாள், 'கல்வி வளர்ச்சி நாள்' ஆகக் கொண்டாடப்படுகிறது.

## பொருள் அறிவோம்

1. அக்கறை - கவனம்
2. களைப்பு - சோர்வு
3. கர்மவீரர் - செயல்வீரர்
4. மதிய உணவு - நண்பகல் உணவு
5. இலவசம் - விலையில்லாதது

## பயிற்சி

## விடை காண்போம்

1. காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்' என அழைக்கக் காரணம் என்ன?
2. மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்குக் காமராசர் எவ்வாறு உதவினார்?
3. காமராசரின் பண்புநலன்களைக் கூறுக.
4. 'காமராசர் பல்கலைக்கழகம்' எங்கு உள்ளது?
5. காமராசரை இந்திய அரசு எவ்வாறு பெருமைப்படுத்தியது?

## 27.3 பாடிமகிழ்வோம்

### எனது ஆசை!

காற்றில் பாய்ந்து செல்லுவேன்
கடலும் மலையும் தாண்டுவேன்
ஆற்று வெள்ளம் தன்னையே
அணைகள் கட்டித் தேக்குவேன்
பாட்டும் கலையும் பயிலுவேன்
பசியும் பிணியும் போக்குவேன்
நாட்டின் செல்வம் ஓங்கவே
நல்ல பணிகள் ஆற்றுவேன்

- பெ. தூரன்



## 27.4 தெரிந்துகொள்வோம்

### தொடரமைப்பு

சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருள் தரும் முறையில் தொடர்வது தொடர் ஆகும். தொடர், 'வாக்கியம்' என்றும் வழங்கப்படுகிறது. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து ஒரு தொடர் அமையும்.

**எழுவாய்**

பெயர்ச்சொல் தொடரின் முதலில் வரும்.

**பயனிலை**

வினைச்சொல் தொடரின் இறுதியில் வரும்.

**செயப்படுபொருள்**

எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் வரும்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை | |
|---|---|---|---|
| சிவா | கவிதை | எழுதினான் |  |
| கதிரவன் | ஓவியம் | வரைந்தான் |  |
| வெண்பா | மலரைப் | பறித்தாள் |  |
| ரோஜா | பாடம் | படித்தாள் |  |
| அக்கா | தட்டச்சு | செய்தார் |  |
| வீரர்கள் | நாட்டைக் | காத்தனர் |  |

## பயிற்சிகள்

### (அ) தொடர்களைப் படித்து, அட்டவணையை நிரப்புக.

1. பார்வேந்தன் மிதிவண்டி ஓட்டினான்.
2. கிளி பழத்தைக் கொத்தியது.
3. வேடன் அம்பை எய்தான்.
4. குழந்தைகள் காகிதக் கப்பல் செய்தனர்.
5. நான் புத்தாடை வாங்கினேன்.

| எண். | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

### (ஆ) கோடிட்ட இடத்தில் எழுவாய்க்குரிய சொல்லைக் கண்டறிந்து எழுதுக.



1. மாலா கடைக்குச் சென்றாள்.

______________________



2. மாமா காய்கறிகளை வாங்கினார்

______________________

## (இ) கோடிட்ட இடத்தில் பயனிலைக்குரிய சொல்லைக் கண்டறிந்து எழுதுக.



1. யானைகள் கூட்டமாகச் சென்றன.

____________________



2. பாலா பாடம் படித்தான்.

____________________

## (ஈ) கோடிட்ட இடத்தில் செயப்படுபொருளுக்குரிய சொல்லைக் கண்டறிந்து எழுதுக.



1. கண்ணன் படம் வரைந்தான்.

____________________



2. அணில் பழம் தின்றது.

____________________

## 27.5 மொழியோடு விளையாடுவோம்

**வட்டத்தின் நடுவே கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் ஊர்ப் பெயர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**















## 27.6 கேட்டல் கருத்தறிதல்

### உழைப்பே உயர்வு



வியாபாரி ஒருவர் தம் கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு சந்தைக்குச் சென்றார். ஓடையைக் கடந்துதான் சந்தைக்குச் செல்லவேண்டும். ஒருநாள் ஓடையைக் கடக்கும்போது கழுதையின் மேல் இருந்த உப்பு மூட்டைகள் ஓடையில் விழுந்தன. அதனால் உப்பு கரைந்து எடை குறைந்தது. இதனை அறிந்து கொண்ட கழுதை, நாள்தோறும் ஓடைநீரில் மூட்டைகளை அசைத்துத் தள்ளியது, கழுதையின் சூழ்ச்சியைப் புரிந்துகொண்டார் வியாபாரி. அதற்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என எண்ணினார். வழக்கம்போல் சந்தைக்குச் செல்லும்போது கழுதையின் முதுகில் உப்புமூட்டைகளுக்குப் பதிலாகப் பஞ்சுமூட்டைகளை வைத்தார். கழுதை மூட்டைகளை அசைத்து ஓடையில் தள்ளியது. ஓடையில் நனைந்ததால் பஞ்சுமூட்டைகள் எடை கூடின. வியாபாரியை ஏமாற்ற நினைத்துத் தன்னைத்தானே கழுதை ஏமாற்றிக்கொண்டது. எனவே, உண்மையான உழைப்பே உயர்வு தரும் எனக் கழுதை புரிந்துகொண்டது.

### வினாக்கள்

1. வியாபாரி என்ன தொழில் செய்தார்?
2. சந்தைக்குச் செல்ல எதனைக் கடந்து செல்லவேண்டும்?
3. உப்பு மூட்டைகளின் எடை குறைய என்ன காரணம்?
4. வியாபாரத்துக்கு வியாபாரி பயன்படுத்திய விலங்கு எது?
5. உண்மையான உழைப்பு எதைத் தரும்?

## சுவைச்செய்தி

### பனிமலைப்புலி



டென்சிங் நோர்கே

'பனிமலைப்புலி' என்னும் சிறப்புப்பெயருக்குச் சொந்தக்காரரர் டென்சிங் நோர்கே. அவர், 29,028 அடி உயரத்திலுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியர். சிறுவயதில், அவருடைய தாயார், எவரெஸ்ட் சிகரத்தைக்காட்டி, பறவையும் பறக்க முடியாத உயரமான மலை என்று இமயமலையைக் கூறுவார். அந்த மலையில்தான் எவரெஸ்ட் சிகரம் இருந்தது. அப்போதே எப்படியாவது, அந்த சிகரத்தின் மீது ஏறிவிடவேண்டும் என்ற ஆசை டென்சிங்கிற்குத் தோன்றியது. அதனை மெய்ப்பித்தும் காட்டினார். இந்தியக்கொடியை அச்சிகரத்தின் மீது நாட்டினார். ஊக்கமும் மனஉறுதியும் இருந்தால் அனைவரும் சாதிக்கலாம்.

## 27.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 27.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

(குறள் 236)

-திருவள்ளுவர்

(தோன்றின் – பிறத்தல்: அஃதிலார் – அவ்வாறு இல்லாதவர்)

**பொருள்:**

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமல் இருப்பதே நல்லது.

## 27.9 அறிந்துகொள்வோம்

1. விண்வெளி - Space
2. பொறியியல் - Engineering
3. விண்கலம் - Spacecraft
4. முயற்சி - Effort
5. ஊக்கம் - Motivation

## 27.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**விடைக்கேற்ற விடுகதை உருவாக்குங்கள்.**

எ.கா.

விடை : கைபேசி

விடுகதை : தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான்.

1. ______________________ (தண்ணீர்)
2. ______________________ (கண்ணாடி)
3. ______________________ (சட்டை)
4. ______________________ (மாதுளை)
5. ______________________ (பந்து)

## 27.11 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த ஆராய்ச்சியாளர்கள் பற்றிய வாழ்க்கை நிகழ்வுகளை வரைகதையாக உருவாக்கி வருக.

## பாடம் 28

### 28.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படத்தின் சூழல் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 28.2 படிப்போம்

### சார்லி சாப்ளின்

ஒவ்வொருவருக்கும் ஒரு சுவை பிடிக்கும். அந்தச் சுவை அறுசுவை என உங்களுக்குத் தெரியும். ஆனால், அறுசுவையில் சேராத ஒரு சுவை உண்டு. அதுதான் நகைச்சுவை. அச்சுவை, நமக்கு மனமகிழ்ச்சியைத் தரும்.

சிலர் நகைச்சுவையாகப் பேசுவர். அவரது பேச்சு, நடந்துகொள்ளும் முறை முதலியவை நம்மைச் சிரிக்க வைக்கும். அதேபோல், நாம் காணும் சில நிகழ்வுகள், நாடகங்கள், திரைப்படங்கள் நமக்கு மகிழ்ச்சியைத் தரும். சில நூல்களில் இடம்பெற்றிருக்கும் உரையாடல்கள், துணுக்குகள் போன்றவைகூட நம்மை வாய்விட்டுச் சிரிக்கச் செய்யும். இப்படிப் படித்தவுடன், பார்த்தவுடன், கேட்டவுடன் நமக்குச் சிரிப்பை வரவழைத்தால், அதனை நகைச்சுவை என்கிறோம்.



நகைச்சுவையாக நடித்தே ஒருவர் உலகப்புகழ் பெற்றார். அவர்தாம், 'நகைச்சுவை மன்னன்' என அழைக்கப்படும் சார்லி சாப்ளின். அவர் சிறுவயதிலேயே நாடகம் மூலம் அறிமுகம் ஆனார். அதன்பின், திரைப்படத்தில் நடித்தார். அவரது காலத்தில் பேசும் படங்களோ வண்ணப் படங்களோ இல்லை. அப்படி இருந்தபோதும், அவரது சைகை மொழி, நடை, உடை, பாவனை என அனைத்தும் எல்லாருக்கும் சிரிப்பைத் தந்தது.

இலண்டன் நகரத்தில் 1889ஆம் ஆண்டு சார்லி சாப்ளின் பிறந்தார். இவர், புகழ்பெற்ற ஹாலிவுட் திரைப்படக் கலைஞர். இவர் நடிகராக மட்டுமின்றி இயக்குநர், இசை அமைப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், தொகுப்பாளர், தயாரிப்பாளர் எனப் பன்முகம் கொண்டு விளங்கினார். இருமுறை ஆஸ்கர் விருது பெற்றுள்ளார். இங்கிலாந்து அரசு, இவரைப் பெருமைப்படுத்தும் வகையில், அஞ்சல் அட்டை வெளியிட்டுள்ளது. அதில் இவரது உருவம் அச்சிடப்பட்டிருக்கும்.

சார்லி சாப்ளின், 1977ஆம் ஆண்டில் மறைந்தாலும் இன்றும் அவரது படங்களை அனைவரும் விரும்பிப் பார்க்கின்றனர். அப்படங்கள், நகைச்சுவையுடன் நம் சிந்தனையையும் தூண்டுகின்றன. நீங்களும் பாருங்கள். வாய்விட்டு, மனம்விட்டுச் சிரியுங்கள். உங்களுக்குள் நகைச்சுவை உணர்வையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

## பொருள் அறிவோம்

1. அறுசுவை - ஆறு சுவை (இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு)
2. நகைச்சுவை - மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஓர் உணர்வு
3. சைகைமொழி - உடல் அசைவுகளால் வெளிப்படுத்துதல்
4. பாவனை - முகத்தில் பலவகை உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல்

## பயிற்சிகள்

### (அ) அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

(சிந்தனை, சைகைமொழி, சார்லி சாப்ளின், இலண்டன், நகைச்சுவை)

1. நகைச்சுவை மன்னன் என அழைக்கப்படுபவர் ________________________.
2. உடல் அசைவுகளால் வெளிப்படும் மொழி ________________________.
3. மனமகிழ்ச்சியைத் தரும் சுவை ________________________.
4. சார்லி சாப்ளின் ________________________ நகரத்தில் பிறந்தார்.
5. சார்லி சாப்ளின் படங்களில் நகைச்சுவை, ________________________ இரண்டும் இருக்கும்.

## விடை காண்போம்

1. சுவை என்றவுடன் நம் அனைவருக்கும் நினைவுக்கு வருவது எது?
2. மனமகிழ்ச்சியைத் தரும் சுவை எது?
3. சார்லி சாப்ளின் எப்பெயரால் அழைக்கப்படுகிறார்?
4. சார்லி சாப்ளின் பன்முகம் கொண்டவர் என்பதை விளக்குக.
5. இங்கிலாந்து அரசு, சார்லி சாப்ளினை எவ்வாறு பெருமைப்படுத்தியது?

## 28.3 பாடிமகிழ்வோம்

### பாட்டுப் பாடுவேன்

இனிக்கும் பாட்டுப் பாடுவேன் – காலை
எழுச்சிப் பாட்டுப் பாடுவேன்
கனி பிழிந்த சாற்றைப் போலக்
காதில் இனிக்கப் பாடுவேன்

குயிலைப் போலப் பாடுவேன் – சின்னக்
குருவி போலப் பாடுவேன்
அயலில் ஓடும் அருவி போல
ஆற்றைப் போலப் பாடுவேன்

வண்டு போலப் பாடுவேன் – தேன்
வண்டு போலப் பாடுவேன்
உண்டு உறங்கிக் கண்விழித்த
உடன் எழுந்து பாடுவேன்

தந்தை வாழ்த்திப் பாடுவேன் – ஈன்ற
தாயை வாழ்த்திப் பாடுவேன்
எந்த நாளும் தமிழை வாழ்த்தி
இனிக்க இனிக்கப் பாடுவேன்

- அழ. வள்ளியப்பா



## 28.4 தெரிந்துகொள்வோம்

### நிறுத்தக்குறிகள்

நிறுத்தக்குறிகளை நமக்கு அறிமுகம் செய்தவர்கள் ஐரோப்பியர்கள். மொழியில் தெளிவை உணர்த்த நிறுத்தக்குறியீடுகள் பயன்படுகின்றன. இவை, ஒரு தொடரின் பொருள் வேறுபாட்டை உணர்த்துவதற்கு அடிப்படையாகும். மொழியைத் தெளிவாகப் புரிந்துகொள்ள நிறுத்தக்குறிகள் துணை நிற்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| காற்புள்ளி | , | ஒற்றை மேற்கோள் | ‘ ’ |
| அரைப்புள்ளி | ; | இரட்டை மேற்கோள் | “ ” |
| முக்காற்புள்ளி | : | வியப்புக்குறி | ! |
| முற்றுப்புள்ளி | . | அடைப்புக்குறிகள் | ( ) |
| வினாக்குறி | ? | இடைக்கோடு | - |

**உரைப்பகுதியில் நிறுத்தக்குறிகள்**

**பாரதியார்**

பாரதியார் எட்டயபுரம் என்னும் ஊரில் 11-12-1882 இல் பிறந்தார். இவர் தந்தையார் சின்னச்சாமி; தாயார் இலக்குமி அம்மையார். பாரதியார் நாடு, மொழி, சமுதாயம் பற்றி நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். இவரை 'மகாகவி' என்று நாம் போற்றுகிறோம். இவர் தம் 39ஆம் வயதில் (11-9-1921) இயற்கை எய்தினார்.

## உரையாடலில் நிறுத்தக்குறிகள்




## பயிற்சி

**பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

1. உன் பள்ளியின் பெயர் என்ன
2. மா பலா வாழை ஆகியவற்றை முக்கனி என்பர்
3. மாலா கலா கீதா மூவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள்
4. என் வீட்டில் அழகான தோட்டம் உண்டு
5. பெருமழை பெய்தது அதனால் வெள்ளம் வந்தது
6. குமார் எங்குச் சென்றான்
7. ஆ தஞ்சைப் பெரிய கோவில் என்னே அழகு

8. உன் குறிக்கோள் என்ன

9. என் அண்ணன் திருக்குறள் புத்தகத்தைப் பரிசாக அளித்தான்

10. நான் பள்ளிக்குச் சென்றேன் பாடம் படித்தேன் பாடல் பாடினேன்

## 28.5 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்துக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 |
| | | | | 4 | |
| | | | 5 | | |
| | | | | | 6 |
| | 8 | | 7 | | |
| | 9 | | | | |

**இடமிருந்து வலம்**

1. தமிழர் திருவிழா
4. நிலத்தில் பெரிய விலங்கு
9. வீட்டைச் சுமந்து செல்லும் உயிரினம்

**வலமிருந்து இடம்**

5. அம்புடன் இருக்கும் பொருள்
6. சாவியின்றி திறக்க முடியாத பொருள்
7. கடல் பயணத்திற்கு உதவும்

**மேலிருந்து கீழ்**

1. நம்மிடம் இருக்க வேண்டிய ஒரு பண்பு
2. பரந்த நீர்நிலை
3. செயலைக் குறிக்கும் சொல்
5. புதிரைக் குறிக்கும் வேறு சொல்
6. மலர்களைத் தொடுத்தால் கிடைக்கும்

**கீழிருந்து மேல்**

8. வேலையைக் குறிக்கும் வேறு சொல்

## தகவல் துளி

நகைச்சுவையை விரும்பாதவர்கள் எவரும் இல்லை. இந்திய நாட்டின் தந்தை எனப் போற்றப்படும் காந்தியடிகள், நகைச்சுவைபற்றிக் கூறிய கருத்து, நம் சிந்தனையைத் தூண்டுகிறது. "நகைச்சுவை உணர்வு மட்டும் என்னிடம் இல்லை எனில், நான் எப்போதோ இவ்வுலகைவிட்டுச் சென்றிருப்பேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## 28.6 கேட்டல் கருத்தறிதல்

### அன்பிற்கு விலை ஏது?




கடற்கரை மணலில் தன் தங்கையுடன் விளையாடிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். அங்கு ஒரு பொம்மைக் கடை இருந்தது. அவன் தங்கை பொம்மைக் கடைக்குச் செல்ல வேண்டும் என்றாள். சிறுவன் தன் தங்கையுடன் கடைக்குச் சென்றான். தங்கை கடையில் இருந்த பொம்மை ஒன்று வேண்டும் என்றாள். அவள் கேட்ட பொம்மையைக் கையிலெடுத்தான் சிறுவன். கடைக்காரரிடம் தன்னிடம் இருந்த சிப்பிகளைக் கொடுத்தான். கடைக்காரர் சிரித்துக்கொண்டே, இந்தப் பொம்மைக்கு நான்கு சிப்பி போதும் என்றார். சிறுவனும் அவன் தங்கையும் பொம்மையைப் பெற்றுக்கொண்டனர். மகிழ்ச்சியோடு சென்றனர். கடையிலிருந்த வேலைக்காரன், ஒன்றுக்கும் உதவாத சிப்பிகளை விலையாகப் பெற்றுக்கொள்ளக் காரணம் என்ன என்று கேட்டான். அதற்குக் கடைக்காரர், பொம்மை வாங்குவதற்குப் பணம் தேவை என்று அந்தச் சிறுவனுக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த மிகச் சிறிய வயதில் தன் தங்கை கேட்ட பொருளைக் கொடுக்க நினைக்கிறான். அந்த அன்பிற்கு விலை ஏதும் இல்லை என்று கூறினார்.

**வினாக்கள்**

1. சிறுவனும் அவன் தங்கையும் எங்கு விளையாடிக் கொண்டிருந்தனர்?
2. சிறுவனின் தங்கை என்ன வேண்டுமென்று கேட்டாள்?
3. சிறுவன் பொம்மையை எப்படி வாங்கினான்?
4. வேலைக்காரன், கடைக்காரரிடம் என்ன கூறினான்?
5. சிறுவனிடம் எத்தகைய பண்பு இருப்பதாகக் கடைக்காரர் கூறினார்?

## 28.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 28.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

(குறள் - 304)

-திருவள்ளுவர்

(உவகை – மகிழ்ச்சி: உளவோ – இருக்கிறதோ)

**பொருள்:**

முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொல்லுகின்ற சினத்தைவிட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

## 28.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உரையாடல் | - | Dialogue |
| 2. | சிரிப்பு | - | Laugh |
| 3. | நகைச்சுவை | - | Humour |
| 4. | வண்ணப்படம் | - | Colour Picture |
| 5. | சைகைமொழி | - | Sign Language |
| 6. | பாவனை | - | Expression |
| 7. | திரைக்கதை | - | Screenplay |
| 8. | இசை அமைப்பாளர் | - | Composer |
| 9. | இயக்குநர் | - | Director |
| 10. | எழுத்தாளர் | - | Writer |
| 11. | தயாரிப்பாளர் | - | Producer |
| 12. | பன்முக ஆளுமை | - | Multifaceted personality |
| 13. | அஞ்சல் அட்டை | - | Postcard |

## 28.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருந்தும் இரு தொடரை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1. |  கடல் | நீர்நிலைகளுள் ஒன்று, கடல்.<br>கடல் நீர் உவர்ப்பாக இருக்கும். |
| 2. |  காகம் | |
| 3. |  கிளி | |
| 4. |  மாம்பழம் | |
| 5. |  யானை | |

## 28.11 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த தலைவர்களுள் ஒருவரின் படத்தை வரைந்து வண்ணம் தீட்டுக

# பாடம் 29

## 29.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படங்கள் உங்களுக்கு எவற்றை நினைவுபடுத்துகின்றன? இந்தப் படங்கள் உணர்த்தும் பண்புகளைக் கூறுக.

## 29.2 படிப்போம்

### மனிதநேயமிக்க சுகந்தி

# பள்ளிப் பேருந்து குளத்தில் மூழ்கி விபத்து

**நாகப்பட்டினம், டிசம்பர் 3, 2009**

வேதாரண்யம் அருகில் மாணவர்களை ஏற்றிச் சென்ற பள்ளிப்பேருந்து, விபத்தில் சிக்கியது. பேருந்தில் மழலையர் கல்வி முதல் ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்கள் இருபது பேர் இருந்தனர். அவர்களுடன் சுகந்தி என்ற ஆசிரியரும் பயணம் செய்தார். திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, அருகிலிருந்த குளத்தில் கவிழ்ந்தது. ஆசிரியர் சுகந்தி, ஜன்னலை உடைத்து. மாணவர்களைக் காப்பாற்ற முயன்றார். ஆனால், அவரால் 11 பேரை மட்டுமே மீட்க முடிந்தது. மற்றவர்களைக் காப்பாற்ற போராடியபோது, அவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.



(செய்தியைப் படித்தபின், ஆசிரியரும் மாணவர்களும் உரையாடுகின்றனர்.)

**ஆசிரியர்** : செய்தியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**கரிகாலன்** : மாணவர்களுக்கு நீச்சல் தெரிந்திருந்தால் பிழைத்திருப்பார்கள்.

**ஆசிரியர்** : உண்மைதான் கரிகாலன். ஆனால், மாணவர்களுக்கும் நீச்சல் தெரியாது. அவர்களைக் காப்பாற்றிய ஆசிரியருக்கும் நீச்சல் தெரியாது.

**கண்ணன்** : அப்படியா? நீச்சல் தெரியாமலேயே இத்தனை பேரைக் காப்பாற்றி இருக்கிறார்களே!

**ஆசிரியர்** : உயிர் விலைமதிப்பற்றது, கண்ணன்! அதனால்தான் தம்முயிரையும் பொருட்படுத்தாமல் அந்த ஆசிரியர் காப்பாற்றியுள்ளார்.

**இலக்கியா** : அவர், மாணவர்களிடம் எந்த அளவிற்கு அன்பு வைத்துள்ளார் எனத் தெரிகிறது.

**ஆசிரியர்** : சரியாகச் சொன்னாய், இலக்கியா. இது மனிதநேயப் பண்புகளுள் ஒன்று.

**பொன்னரசி** : மனிதநேயமா? அப்படி என்றால் என்ன?

**ஆசிரியர்** : அன்பு. பிற உயிர்களிடத்துக் காட்டும் பரிவு, இரக்கம் என்றும் சொல்லலாம். ஒருவர், சரியான நேரத்தில் மற்றவருக்குச் செய்யும் உதவிதான் இது.

**மாணவர்கள்** : நாங்களும் மனிதநேயத்தின் தேவையைப் புரிந்துகொண்டோம். இந்தப் பண்பை வளர்த்துக் கொள்வோம்.

**ஆசிரியர்** : மிக்க மகிழ்ச்சி.

## பொருள் அறிவோம்

1. குளம் - நீர்நிலை
2. விபத்து - எதிர்பாராத நிகழ்வு
3. பயணம் - ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் செல்லுதல்
4. முயன்றார் - முயற்சி செய்தார்
5. பிழைத்தல் - உயிர்தப்புதல்

## பயிற்சி

### விடை காண்போம்

1. நாளிதழ் செய்திபற்றிக் கிரண் என்ன கூறினான்?
2. பேருந்து நீரில் மூழ்கியபோது, ஆசிரியர் என்ன செய்தார்?
3. விபத்தின்போது, ஆசிரியர் செய்த செயலைப் பற்றி இலக்கியா என்ன கூறினாள்?
4. ஆசிரியர் சுகந்தியிடம் வெளிப்பட்ட பண்பு யாது? அது பற்றிக் கூறுக.
5. விபத்து நடந்த ஊரின் பெயர் மற்றும் ஆண்டு என்ன?

## 29.3 பாடி மகிழ்வோம்

நல்ல பண்பை வளர்ப்போமே!
நாளும் நன்மை செய்வோமே!
எவர்க்கும் உதவி மகிழ்வோமே!
ஏற்றஇறக்கம் களைவோமே!

பொன்னும் பொருளும் நிலையில்லை
புகழ்ச்சிக்கு மயங்கா மனிதரில்லை
அழியும் செல்வம் பொருட்செல்வம்
அறிந்துகொண்டால் துன்பமில்லை

மன்னுயிர் காத்து வாழ்வோமே!
மனிதநேயம் வளர்ப்போமே!
இரக்கம் என்னும் நற்பண்பை
இன்றும் என்றும் பெறுவோமே!

- பாடநூல் குழுவினர்

## 29.4 தெரிந்துகொள்வோம்

### செய்வினைத் தொடர்கள்

| செய்வினைத் தொடர்கள் | எழுவாய் | பயனிலை | செயப்படு பொருள் | |
|---|---|---|---|---|
| முருகன் வண்டி ஓட்டினான் | முருகன் | ஓட்டினான் | வண்டி |  |
| மாறன் நூல் வாங்கினான் | மாறன் | வாங்கினான் | நூல் |  |
| அனிதா துணி மடித்தாள் | அனிதா | மடித்தாள் | துணி |  |
| ஓவியர் படம் வரைகிறார் | ஓவியர் | வரைகிறார் | படம் |  |

| | | | | |
|---|---|---|---|---|
| மான் புல் மேய்ந்தது | மான் | மேய்ந்தது | புல் |  |
| மீனவர் மீன்களைப் பிடித்தார் | மீனவர் | பிடித்தார் | மீன்களை |  |

## செயப்பாட்டுவினைத் தொடர்கள்

| செயப்பாட்டு வினைத் தொடர்கள் | எழுவாய் | பயனிலை | செய்யப்படு பொருள் | படங்கள் |
|---|---|---|---|---|
| வண்டி முருகனால் ஓட்டப்பட்டது | வண்டி | ஓட்டப்பட்டது | முருகனால் |  |
| நூல் மாறனால் வாங்கப்பட்டது | நூல் | வாங்கப்பட்டது | மாறனால் |  |

| | | | | |
|---|---|---|---|---|
| துணி அனிதாவால் மடிக்கப்பட்டது | துணி | மடிக்கப்பட்டது | அனிதாவால் |  |
| படம் ஓவியரால் வரையப்பட்டது | படம் | வரையப்பட்டது | ஓவியரால் |  |
| புல் மானால் மேயப்பட்டது | புல் | மேயப்பட்டது | மானால் |  |
| மீன்கள் மீனவரால் பிடிக்கப்பட்டன | மீன்கள் | பிடிக்கப்பட்டன | மீனவரால் |  |

## பயிற்சிகள்

**(அ) பின்வரும் தொடர்களில் எழுவாயை அடிக்கோடிட்டுக் காட்டுக.**

1. ஆசிரியர் மணியைப் பாராட்டினார்.
2. கோழி நெல்லைக் கொத்தியது.
3. மருத்துவர் மருந்து தந்தார்.
4. இனியா அழைப்பிதழ் உருவாக்கினாள்.
5. சிறுவர்கள் மணல்வீடு கட்டினார்கள்.

**(ஆ) பின்வரும் தொடர்களில் செயப்படுபொருள் எது? என குறியிட்டுக்காட்டுக.**

1. சிட்டுக்குருவி கூடு கட்டியது

சிட்டுக்குருவி ☐ கூடு ☐

2. தச்சர் நாற்காலி செய்தார்

நாற்காலி ☐ தச்சர் ☐

3. சிறுவன் செடி நட்டான்

சிறுவன் ☐ செடி ☐

4. சங்கர் கடிதம் எழுதினான்

எழுதினான் ☐ கடிதம் ☐

5. சிறுமி பாடல் பாடினாள்

சிறுமி ☐ பாடல் ☐

**(இ) பின்வருவனவற்றைச் செயப்பாட்டு வினைத்தொடர்களாக மாற்றுக.**

1. பூனை எலியைப் பிடித்தது - எலி பூனையால் பிடிக்கப்பட்டது.
2. மல்லிகா மலர்களைப் பறித்தாள் - ______________________.
3. புலி மானைத் துரத்தியது - ______________________.
4. பெண்கள் நடனம் ஆடினார்கள் - ______________________.
5. இளவரசி யாழ் மீட்டினாள் - ______________________.

## 29.5 மொழி விளையாட்டு

**வட்டமிட்ட சொற்களைக் கொண்டு, குறிப்புகளுக்கு ஏற்ற விடை காண்க.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | க | ட | ன் | த | பு |
| ட | எ | ட் | டு | பா | ல் |
| ல் | சு | ம | சொ | ல் | தை |
| | ட | ல் | ல் | | சி |
| ள் | ர் | லி | இ | லி | லை |
| ம் | ப | | அ | கு | டை |

### குறிப்புகள்:

1. பரந்த நீர்நிலை ______________________.

2. சிற்பி செதுக்குவது ______________________.

3. மணம் வீசுவது ______________________.

4. மழைக்கும் வெயிலுக்கும் உதவுவது ______________________.

5. பசு தருவது ______________________.

## தகவல் துளிகள்

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதம் 19ஆம் நாள், உலக மனிதநேய நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாளில் பிறர்க்காகத் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் பாடுபட்ட மனிதநேயப் பண்பாளர்களை நாம் நினைக்கவேண்டும். மழை, வெள்ளம், நிலநடுக்கம் முதலான இயற்கைப் பேரிடர்கள், போர், குண்டுவெடிப்பு போன்ற வன்முறை நிகழ்வுகள் முதலியவற்றால் பலரும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்குத் தகுந்த நேரத்தில் உதவுபவர்கள், சில நேரத்தில் உயிரிழக்கும் நிலையும் ஏற்படுகிறது. அவர்களை நினைவுகூர்வதற்காகவும் பிறருக்கு உதவும் எண்ணத்தைத் தூண்டுவதற்காவும் இந்நாள் நினைவுகூரப்படுகிறது.

## கருத்து விளக்கப்படம்

### இரத்த தான முகாம்




### வினாக்கள்:

1. எதற்காக முகாம் நடத்தப்படுகிறது?
2. முகாம் எங்கு, எப்போது நடைபெறுகிறது?
3. இரத்த தானம் செய்வோருக்குரிய தகுதிகள் யாவை ?
4. இரத்த தானம் ஏன் செய்யவேண்டும்? உம் கருத்தைக் கூறுக.

## 29.6 கேட்டல் கருத்தறிதல்

### போரில் பூத்த மனிதநேயம்



மனிதநேயம் என்றால் இரக்க குணம் என்று சொல்லலாம். ஆனால், அத்தகைய இரக்க குணத்தை இரு நாட்டு அரசர்கள் இடையே நடைபெறும் போரில் வெளிப்படுத்தி உள்ளனர் என்றால் வியப்பாக உள்ளது. ஆம்! நம் தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணம் என்ற நூலில் இச்செய்தி "இன்று போய் போர்க்கு நாளை வா என நல்கினன்" என்ற பாடல் (பா. 7271) மூலம் கூறப்பட்டுள்ளது. அதாவது, இராமனுக்கும் இராவணனுக்கும் இடையே நடைபெற்ற போரில் இராவணன் தன் படை வீரர்களையும் படைக்கருவிகளையும் இழந்து நின்றார். இத்தகைய சூழலில் தன் எதிரியிடம் எதிர்த்துப் போர் புரிய எவ்விதப் படைக்கருவிகளும் இல்லை என்ற காரணத்தால் இராமன், இராவணனைக் கொல்ல நினைக்கவில்லை. அதனால், நீ மீண்டும் போர் செய்ய நினைத்தால், "இன்று போய் நாளை வா" என்று கூறி மனிதநேயத்தை வெளிப்படுத்தி உள்ளார் என்று கூறுகிறது அப்பாடல்.

### வினாக்கள்:

1. தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தி என்ன?
2. யார் யாருக்குமிடையே போர் நடைபெற்றது?
3. படைக்கலமின்றி வெறுமையாக இருந்தவரிடம் மற்றவர் கூறிய செய்தி என்ன?
4. செய்தி எந்த நூலில் எந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

## 29.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 29.8 செந்தமிழ்ச்செல்வம்

### ஆசாரக்கோவை

கைப்பன எல்லாம் கடை, தலை தித்திப்ப,

மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்

துய்க்க, முறை வகையால் ஊண்

-(பாடல் 25)

-பெருவாயின்முள்ளியார்

(கைப்பன - கசப்பன; மெச்சும் - புகழும்; துய்க்க- அனுபவிக்க)

**பொருள்:**

இனிப்பான உணவுகளை முதலில் உண்ண வேண்டும். இறுதியில் கசப்பான உணவுகளை உண்ணவேண்டும். வேறு சுவைப் பொருள்களை இடையே உண்ணல் வேண்டும்.

## 29.9 அறிந்து கொள்வோம்

1. பேருந்து - Bus
2. குளம் - Pond
3. விபத்து - Accident
4. பயணம் - Journey
5. மனிதநேயம் - Humanity

## 29.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கொடுக்கப்பட்ட படங்களைத் தொடர்புபடுத்திக் கதை உருவாக்கிக் கூறுக.**








## 29.11 செயல்திட்டம்

**நற்செய்கை நாட்குறிப்பேடு தயாரிக்க.**

கடந்த ஒரு மாதத்தில் நீங்கள் செய்த நற்செயல்களை நாட்குறிப்பேட்டில் எழுதி வருக.

30.1 பேசுவோம்

பாடம்

30




## கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படம் உணர்த்தும் செய்திகளைப் பற்றிக் குழுவாகக் கலந்துரையாடுக.

## 30.2 படிப்போம்

### மனிதம் போற்றும் மரியா




2015இல் ஐரோப்பா ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டி நடந்தது. அதில் ஈட்டி எறிதல் போட்டியில் **மரியா மாக்டலேனா ஆண்ட்ரெசிக்** என்பவர் தங்கப்பதக்கம் வென்றார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் 2 செ.மீட்டர் வித்தியாசத்தில் பதக்கத்தைத் தவறவிட்டார். 2017இல் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. வலியால் வருந்தினார். 2018இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சைக்குப்பின் நோயிலிருந்து விடுபட்டார்.

கனவுகள் விரியும் கண்களுடன் 2020இல் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக் களத்துள் நுழைந்தார். சிங்கம் போல் கம்பீரமாய் ஈட்டியை எடுத்தார். எத்தனை தடைகள் வந்தாலும் தகர்த்தெறிந்தார். மனஉறுதியுடன் ஆற்றல் முழுவதையும் திரட்டினார். அதிக வேகத்துடன் ஈட்டி எறிந்தார்.

ஈட்டி 64.61 மீட்டர் தூரம் சென்றது; இலக்கை எட்டியது; இரண்டாம் இடத்தை அடைந்தது; வெள்ளிப்பதக்கம் கைகளில் தவழ்ந்தது.

வெற்றிப்பதக்கம் சில வாரங்களே வீட்டை அலங்கரித்தது. பயணம் முடித்துத் திரும்பினார் மரியா. முகநூலைப் பார்வையிட்டார். “இதயக் குறைபாடு உடைய எட்டுமாதக் குழந்தை மிலோசெக் மலிசா, தெற்குப் போலந்தைச் சேர்ந்தவர். அவரின் இதய அறுவைச் சிகிச்சைக்கு நிதி உதவி தேவை” என்ற வாசகத்தைப் படித்தார்.

இச்செய்தி ஈட்டிபோல் மரியாவின் இதயத்தைத் துளைத்தது. இளகிய இதயம் கருணையால் மலர்ந்தது. சற்றும் யோசிக்கவில்லை. அக்குழந்தையின் பெற்றோரிடம் பேசி விவரம் கேட்டறிந்தார்.

குழந்தையின் அறுவைச் சிகிச்சைக்கு ஐரோப்பிய மருத்துவமனைகள் மறுத்தன. அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழக மருத்துவமனை ஆதரவு தெரிவித்தது. அறுவைச் சிகிச்சைக்கான செலவு 3 கோடியாகும் என்றனர். பெற்றோர் பாதியளவு நிதி திரட்டினர்.

மரியா ஆண்ட்ரெசிக் தாம் பார்த்தறியாத அக்குழந்தைக்காக மனமிரங்கினார். தன் வாழ்நாள் இலக்கான முதல் ஒலிம்பிக் பதக்கத்தை அக்குழந்தையின் இதய அறுவைச் சிகிச்சைக்காக ஏலம்விட முடிவு செய்தார். அறிவிப்பை முகநூலில் பதிவிட்டார்.

போலந்து கன்வீனியன்ஸ் ஸ்டோர் சங்கிலி என்ற அமைப்பு 93 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது. அத்தொகையைச் சிகிச்சைக்குக் கொடுத்து உதவினார். இதை அறிந்த செய்தியாளர் இது உங்கள் கனவல்லவா ? எனக் கேட்டனர்.

இந்த வெற்றிக்கனவு எனக்கு மகிழ்ச்சிதான். வெள்ளிப்பதக்கம் அலமாரியை அலங்கரிப்பதைவிட உயிரைக் காப்பதே சிறப்பு. கனவைவிட உயிர் காப்பது மதிப்பும் மகிழ்ச்சியும் தருமே! என் வெற்றியை, மகிழ்ச்சியை இதன் மூலம் சிறு குழந்தைக்குக் கடத்த விரும்புகிறேன் என்றார் மரியா.

மனிதம் போற்றும் மரியாவின் மனிதநேயத்தைப் போற்றியது அந்த நிறுவனம். ஏலத்தில் எடுத்த பதக்கத்தைத் திரும்ப அவரிடமே தக்க வைக்குமாறு கேட்டுக்கொண்டது.

மனிதநேயத்தின் முன் எதுவும் பெரிதல்ல என்று தம் வெற்றியைத் தாரை வார்த்தார் மரியா. மனிதநேயமே மகத்தான வெற்றி என்பதைத் தம் செயலால் உலகறியச் செய்தார்.

மரியாவின் மனிதநேயம் என்றும் மரிக்காது. மனிதநேயம் போற்றுவோம் மாண்புடன் வாழ்வோம்.

## பொருள் அறிவோம்

1. அலங்கரித்தது - அழகுபடுத்தியது
2. சிகிச்சை - மருத்துவம்
3. வித்தியாசம் - வேறுபாடு
4. தகர்த்தெறிந்தார் - உடைத்தெறிந்தார்
5. கருணை - இரக்கம்
6. விவரம் - செய்தி

## பயிற்சி

### விடை காண்போம்

1. ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடத்தின் பெயரைக் கூறுக.
2. நிகழ்வில் வரும் விளையாட்டு வீராங்கனையின் பெயர் என்ன ?
3. மரியா ஆண்ட்ரெசிக் ஈட்டி எறிதலில் என்ன பதக்கம் வென்றார் ?
4. மரியா எதற்காக வெள்ளிப் பதக்கத்தை ஏலம் விட்டார் ?
5. கனவைவிடச் சிறந்ததாக மரியா குறிப்பிடுவது எது ?

## 30.3 பாடி மகிழ்வோம்

### இன்பம்

கற்றவர்முன் தாம் கற்ற

கல்வியைக் கூறல் இன்பம்

வெற்றியை வாழ்வில் சேர்க்கும்

வினைபல புரிதல் இன்பம்

சிற்றினக் கயவ ரோடு

சேராது வாழ்தல் இன்பம்

பெற்றதை வழங்கி வாழும்

பெருங்குணம் பெறுதல் இன்பம்

- கவிஞர் சுரதா



## 30.4 தெரிந்துகொள்வோம்

### தொடரமைப்பு – நான்கு சொல் கொண்ட தொடர்கள்

| | |
|---|---|
| மகிழ்நன் மேடையில் பாடல் பாடினான். |  |
| யாழினி தோட்டத்தில் மலர் பறித்தாள். |  |
| ஆமையும் மீனும் நீரில் நீந்தின. |  |
| கண்ணன் நண்பர்களுடன் கால்பந்தாட்டம் விளையாடினான். |  |
| தாத்தா நாள்தோறும் செய்தித்தாள் படிக்கிறார். |  |

## பயிற்சிகள்

**(அ) படம் பார்த்து, நான்கு சொல் கொண்ட தொடர் உருவாக்குக.**

| | |
|---|---|
|  | |
|  | |
|   | |
|  | |
|  | |

**(ஆ) சொற்கள் இடம் மாறியுள்ளன. அவற்றை முறைப்படுத்திக் கட்டத்திற்குள் எழுதுக.**

சென்றாள் மாலையில் அங்காடிக்குச் அம்மா

1.

சுற்றுலா சென்றனர் மாணவர்கள் மதுரைக்குச்

2.

கப்பலில் பயணம் செய்தான் அண்ணன்

3.

கூடு சிட்டுக்குருவி கட்டியது மரத்தில்

4.

கவிதா சென்றாள் பள்ளிக்குச் பேருந்தில்

5.

## 30.5 மொழி விளையாட்டு

**எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் சொற்களை உருவாக்குக. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு தொடர் உருவாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ம | லை | மலை | மலையிலிருந்து அருவிநீர் விழுகிறது. |
| | மா | | மாலை | கண்மணி மலர்களைத் தொடுத்து மாலையாக்கினாள். |
| 2 | க | ண் | | |
| | | | | |
| 3 | கு | டை | | |
| | | | | |
| 4 | ந | டு | | |
| | | | | |
| 5 | எ | ரி | | |
| | | | | |
| 6 | ப | னை | | |
| | | | | |

### தகவல் துளிகள்



இந்தியக் குழந்தைகள் நல அமைப்பு ஆண்டுதோறும் பல்வேறு பிரிவுகளில் தேசிய வீரதீர விருதுக்கான சிறுவர், சிறுமிகளைத் தேர்வு செய்கிறது. 2019ஆம் ஆண்டிற்கான இவ்விருது 10 சிறுமிகள், 12 சிறுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டான சூழலில் பல்வேறு உயிர்களைக் காப்பாற்றியவர்கள் இவ்விருதுகளைப் பெறுகின்றனர். இதன் மூலம் வீரதீரச் செயலால் மற்றவர்களுக்கு உதவும் பண்பு வளர்கிறது. இவ்விருது பெற்றவர்களுள் ஒருவர், கேரளாவைச் சேர்ந்த ஆதித்யா. இவர், 2019 மே மாதம் நேபாளத்தில் மலைப்பகுதியிலிருந்து இந்தியாவிற்குப் பேருந்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது எரிபொருள் கசிவு ஏற்பட்டதை உணர்ந்து கூறினார். சற்று நேரத்தில். பேருந்தில் தீப்பற்றத் தொடங்கியது. சுத்தியலின் உதவியால் கண்ணாடி உடைக்கப்பட்டு 40 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். அவர்களைக் காப்பாற்றியதற்காகத் 'தேசிய வீரதீர விருது' ஆதித்யாவிற்கு வழங்கப்பட்டது.

## 30.6 கேட்டல் கருத்தறிதல்

### மனித நேயம்



கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், உலகமே முடங்கியது. மக்கள் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமல் துன்பப்பட்டனர். அந்நிலையில், மனிதநேயம் மிக்கவர்கள், மற்றவர்களுக்கு உதவினர். தாம் ஈட்டிய பெருஞ்செல்வத்தைத் துன்பப்படுபவர்களுக்கு மனம் உவந்து அளித்தனர். அத்தகைய பண்பாளர்களுக்கு ஐக்கிய நாடுகள் அவை உயரிய விருது வழங்கிச் சிறப்பித்தது. இந்தியாவிலிருந்து நடிகர் சோனுசூட் சிறப்பு மனிதநேய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார். இவர், கொரோனா காலத்தில் பலருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார். அயலகம் சென்று படித்துக் கொண்டிருந்த மாணவர்கள், பாதுகாப்புடன் திரும்பி வருவதற்கு உதவினார். பொதுமுடக்கம் ஏற்பட்டபோது, போக்குவரத்து இல்லாததால் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் தம் சொந்த ஊர் திரும்ப முடியாமல் துன்பப்பட்டனர். அவர்கள் திரும்பிச் செல்வதற்கும் ஏற்பாடு செய்தார். அவருக்கு விருது வழங்கிச் சிறப்பித்தபோது, 'என் நாட்டு மக்களுக்காக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்கிறேன்' என்று அவர் கூறியமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வினாக்கள்:

1. உரைப்பகுதியில் குறிப்பிடப்படும் பெருந்தொற்று எது?
2. ஐக்கிய நாடு அவை வழங்கிய சிறப்பு விருது எது?
3. இந்தியாவிலிருந்து மனிதநேய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?
4. திரு. சோனுசூட் செய்த மனிதநேயச் செயல்கள் யாவை?
5. விருது பெற்றபின், திரு. சோனுசூட் கூறியது என்ன?

## 30.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 30.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

(குறள் - 93)

-திருவள்ளுவர்

(இனிது – இன்பம் தருவது; நோக்கி – பார்த்தல்; இன்சொல் – இனிமையான சொல்)

**பொருள்:**

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்

## 30.9 அறிந்து கொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1.. | பணிவிடை | - | Service |
| 2. | போர் | - | War |
| 3. | காயம் | - | Wound |
| 4. | சிகிச்சை | - | Treatment |
| 5. | சிறுவிளக்கு | - | Little lamp |

## 30.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் குறிப்புகள் கொண்டு வரைகதை (Cartoon) உருவாக்குக.**

- ❖ மாணவர்கள் சாலையோரம் நடந்து செல்லுதல்.
- ❖ வயதான பெண் ஒருத்தி, தன் தள்ளுவண்டியில் பழங்களை ஏற்றிக்கொண்டு வருதல்.
- ❖ வழியிலுள்ள பள்ளத்தில் வண்டி சாய, அப்பெண் தடுமாறுதல்.
- ❖ மாணவர்கள் விரைந்தோடி வருதல்.
- ❖ வண்டியைத் தூக்கி நிறுத்துதல்.
- ❖ பெண்ணுக்குத் தேவையான உதவிகளைச் செய்தல்.

## 30.11 செயல்திட்டம்

மனிதநேயச் செயல்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருக.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான இரட்டைக்கிளவிகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(கீச்கீச், கடகட, கருகரு, கமகம, சரசர)

1. கனமழையின் காரணமாக மேகம் ____________ எனக் கருத்திருந்தது.
2. தோட்டத்தில் பாம்பு ____________ என ஊர்ந்தது.
3. கூண்டுக்குள் இருந்த கிளி ____________ என்று ஒலி எழுப்பியது.
4. அவன் போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்பதனால் ____________ என்று ஓடினான்.
5. அம்மா செய்த சமையலின் வாசனை ____________ என இருந்தது.

**2) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள செயப்படுபொருளை வண்ணமிடுக.**

1. அணில் பழத்தைத் தின்றது.
2. குமரன் கல்லூரிக்குச் சென்றான்.
3. நர்மதா கடற்கரையில் விளையாடினாள்.
4. கடிகாரம் கீழே விழுந்தது.
5. நாய் பூனையைத் துரத்தியது.

**3) பின்வரும் எண்ணுப் பெயர்களைச் சரியான எண்களோடு பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஐந்நூறு | - | 200 |
| 2. | ஆயிரம் | - | 400 |
| 3. | நானூறு | - | 600 |
| 4. | இருநூறு | - | 1000 |
| 5. | அறுநூறு | - | 500 |

**4) கீழ்க்காணும் உரைப்பகுதியில் தேவையான நிறுத்தக் குறியீடுகளை இடுக.**

முல்லாவின் வீட்டில் சிறுவன் ஒருவன் வேலை செய்து கொண்டிருந்தான் முல்லா ஒருநாள் புதுப்பானை ஒன்றை வாங்கி வந்தார் பையா இந்தப் பானையை எடுத்துக்கொண்டு கிணற்றுக்குப் போய் நிறைய நீர் கொண்டு வா எனக் கூறினார் பையன் பானையை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குப் புறப்பட்டான் முல்லா சற்றுத் தூரம் சென்ற பையனைக் கூப்பிட்டார் பையன் திரும்பி வந்து என்ன எஜமானே என்று கேட்டான் இந்தப் பானை புத்தம் புதியது அதிகப் பணம் கொடுத்து வாங்கியிருக்கிறேன் இதை நீ அஜாக்கிரதையாகக் கையாண்டு உடைத்தாயானால் அடி கொடுப்பேன் என்று கூறினார்.

5) **கீழ்க்காணும் செய்வினைத் தொடர்களை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக.**

1. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.
2. மாறன் படம் பார்த்தான்.
3. ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்.
4. தச்சர் நாற்காலியைச் செய்தார்.
5. பாரதியார் குயில்பாட்டைப் பாடினார்.

6) **கீழ்க்காணும் தொடர்களில் வண்ணமிடப்பட்ட சொல் எழுவாய் என்பது சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. சோழர்கள் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினர். (சரி/தவறு)
2. குமரன் தன் தங்கையுடன் மாமா வீட்டிற்குச் சென்றான். (சரி/தவறு)
3. மயில் தன் தோகையை விரித்து ஆடும். (சரி/தவறு)
4. அவன் புதிதாக ஒரு பொம்மையை வாங்கினான். (சரி/தவறு)
5. ஆந்தை இரவில் மட்டுமே விழித்திருக்கும். (சரி/தவறு)

7) **கீழ்க்காணும் செயப்பாட்டுவினைத் தொடர்களை வரிசைப்படுத்துக.**

1. எரிக்கப்பட்டது மதுரை கண்ணகியால்.
2. சிலை செதுக்கப்பட்டது சிற்பியால்.
3. விலங்குகள் வேடர்களால் வேட்டையாடப்பட்டன.
4. தம்பியால் உதைக்கப்பட்டது பந்து.
5. படிக்கப்பட்டது அவனால் புத்தகம்.

8) **சரியான அடுக்குத் தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(சுடச்சுட, விடியவிடிய, பழகப்பழகப், கூடிக்கூடி, கதறிக்கதறி)**

1. நண்பர்கள் ____________ விளையாடினர்.
2. குழந்தை ____________ அழுதது.
3. கோவிலில் ____________ அன்னதானம் வழங்கப்பட்டது.
4. நாளை நடைபெற உள்ள தேர்விற்கு அவன் ____________ படித்தான்.
5. ____________ பாலும் புளிக்கும்.

9) **கீழ்க்காணும் நிறுத்தக் குறியீடுகளை அவற்றிற்கான பெயரோடு பொருத்துக.**

1. . - இரட்டை மேற்குறி
2. : - அரைப்புள்ளி
3. ; - காற்புள்ளி
4. " " - முற்றுப்புள்ளி
5. , - முக்காற்புள்ளி

10) **கீழ்க்காணும் தொடர் சரியா?/ தவறா? எனக் குறிப்பிடுக.**

1. கேரட்டில் 'உயிர்ச்சத்து டி' உள்ளது. (சரி/ தவறு)
2. ஒரு நெல்லிக்காய் மூன்று ஆப்பிளுக்குச் சமம். (சரி/ தவறு)
3. வாழைப்பழத்தில் உயிர்ச்சத்து இல்லை. (சரி/ தவறு)
4. மாம்பழம் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். (சரி/ தவறு)
5. வெண்டைக்காய் உண்பதால் நினைவுத் திறன் அதிகரிக்கும். (சரி/ தவறு)

11) **கீழ்க்காணும் இரட்டைக்கிளவிச் சொற்களுக்குப் பொருந்தும் தொடர்களை உருவாக்குக.**

1. சடசட - ______________________.
2. வெளுவெளு - ______________________.
3. மளமள - ______________________.
4. குளுகுளு - ______________________.
5. தடதட - ______________________.

12) **பின்வரும் நூல்களை ஆசிரியர் பெயர்களோடு பொருத்துக.**

1. திருக்குறள் - பூதஞ்சேந்தனார்
2. ஆத்திசூடி - பெருவாயின் முள்ளியார்
3. இனியவை நாற்பது - முன்றுறை அரையனார்
4. ஆசாரக்கோவை - ஔவையார்
5. பழமொழி நானூறு - திருவள்ளுவர்

**13) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. நோய் எதிர்ப்புச் சக்தி -
2. உயிர்ச்சத்து -
3. பொறாமை -
4. வாய்மை -
5. விண்வெளி -
6. பன்முகம் -
7. மனிதநேயம் -
8. பணிவிடை -
9. புறம்பேசுதல் -
10. சைகைமொழி -

**14) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு நான்கு சொல் கொண்ட தொடர் உருவாக்குக.**

1. காய்கறி ______________________________

2. சுற்றுலா ______________________________

3. அப்துல்கலாம் ______________________________

4. நகைச்சுவை ______________________________

**15) பின்வரும் தொடர்களிலுள்ள எழுவாய், பயனிலை மற்றும் செயப்படுபொருள் ஆகியவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுக.**

1. மாதவன் காய்கறிகள் வாங்கினான்.
2. மரங்கள் காற்றில் விழுந்தன.
3. அப்பா சிறந்த ஆசிரியருக்கான விருதைப் பெற்றார்.
4. கவிதா சதுரங்கம் விளையாடினாள்.
5. நண்பர்கள் ஊட்டிக்குச் சுற்றுலா சென்றனர்.

16) பின்வரும் விளம்பர அட்டையைப் பார்த்துக் கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.




1. மரக்கன்று நடுவிழா எங்கு, எப்பொழுது கொண்டாடப்படுகிறது ?

2. மரக்கன்றுகளை வழங்குவோர் யார் ?

3 மரக்கன்று நடுவிழா குறித்து இரண்டு தொடர் எழுதுக?

# அடிப்படை மொழித்திறன்கள்
# பாடங்கள் – 17–30 பாடங்கள், இலக்கணம், மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- புதிய சொற்களைக் கேட்டுப் பொருள் உணர்தல்.
- சிறுசிறு தொடர்களைக் கேட்டறிதல்.
- எளிய பாடல்களைக் கேட்டு மகிழ்தல்.
- உரைப்பகுதியைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- அறக்கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.
- இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல். (ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர்கள், தொடரமைப்புகள்)

## பேசுதல்

- படக்காட்சிகள், சூழல்களைப் புரிந்துகொண்டு பேசுதல்.
- சிறுசிறு தலைப்புகளில் கருத்தாடல் செய்தல்.
- குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளைத் திரட்டிக் குழுவில் கலந்துரையாடுதல்.
- தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடை காணல்.
- எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்கள், தொடரமைப்புகள் போன்றவை)
- ஒலிவேறுபாடுடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்.
- மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுச்சொற்கள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், நிறுத்தக்குறிகள் போன்றவை)
- படக்கதைகளைப் புரிந்துகொண்டு, கோர்வையாகப் பேசுதல்.

## படித்தல்

- சிறுசிறு தொடர்களைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்.
- எளிய உரைப்பகுதிகளைப் படித்துக் கருத்துணர்தல்.
- புதிய சொற்களைப் படித்துப் பொருள் அறிதல்.
- குரல் ஏற்றஇறக்கம், ஒலிப்புமுறை அறிந்து தெளிவாகப் படித்தல்.
- எளிய பாடல்களைப் பாடி மகிழ்தல்.
- அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.
- இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்கள், தொடரமைப்புகள்)
- எளிய நடைமுறை இலக்கணக் கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுச்சொற்கள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், நிறுத்தக்குறிகள் போன்றவை)
- இரு சொல் தொடர்களைப் படித்தல்.
- விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல்.

## எழுதுதல்

- புதிய சொற்களுக்குப் பொருள் அறிந்து எழுதுதல்.
- உரைப்பகுதிகளைப் படித்துப் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.
- இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்கள், தொடரமைப்புகள்)
- எளிய மொழிப்பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள், மரபுச்சொற்கள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், நிறுத்தக்குறிகள் போன்றவை)
- விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்,
- உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
- ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.
- படத்தொகுப்புகள், நாட்குறிப்புகள், கையெழுத்து இதழ்கள் உருவாக்குதல்.
- எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் ச. மாடசாமி,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி,

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திரு. நி. சிவக்குமார்,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், குமுளூர் லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பபேட்டடை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு. அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி.

## பாட ஆசிரியர் குழு

**திருமதி மு.கீதா,**
இடைநிலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம்

**திருமதி இரா. விஜயலெட்சுமி,**
பட்டதாரி தமிழாசிரியை, அரசு மேல்நிலைப் பள்ளி, தி.சுக்காம்பட்டி, மணப்பாறை கல்வி மாவட்டம், திருச்சி மாவட்டம்.

**திருமதி சு. வசந்தா,**
பட்டதாரி ஆசிரியர், பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம் (CBSE), கீழ்ப்பாக்கம், சென்னை.

**திருமதி ப.சித்ரகலா,**
பட்டதாரி ஆசிரியர், சின்மயா வித்யாலயா (CBSE), சின்மயா நகர், விருகம்பாக்கம், சென்னை.

**திருமதி. பி. மாங்கனி,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு உயர் நிலைப் பள்ளி, நாகமங்கலம், அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

**திரு. இ.பெரியசாமி,**
முதுகலை ஆசிரியர் (தமிழ்), அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி எடப்பாடி, சேலம் மாவட்டம்.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-6-7